# பெருமழையினுல் வட பகுதிக்கு அதிர்ஷ்டம்; உப உணவு உற்பத்திக்கு புதிய திட்டம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

மலர் 11
இதழ்: 338
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 4 ஜுலக்கம் 8 சனிக்கிழமை [17-1-7]

உங்களுக்கு தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7199 தந்தி: வைரம்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் கடந்த மாதம் பெய்த பெரும் மழை விவசாயத் திட்டத்தில் அதிக அபிவிருத்தி ஏற்படுத்தும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகின்றது இதற்கான புதியவிவசாயத் திட்டம் ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ்பீட்டர்ஸ் தயாரித்துள்ளார்.

இத் திட்டம் இவ்வருட சிறு போகத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப் படவிருக்கின்றது இதற்கான கூட்டங்களை நடாத்தும் முழு ஒழுங்குகளும் உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

1957ம் வருடத்திற்குப் பின் 12 வருட இடைவெளியில் கடந்த மாதம் பெய்த பெரும் மழையினுல் வடக்கிலுள்ள சிறிய பெரிய குளங்களும் நிரம்பிவழிவதாலேயே புதிய விவசாயத் திட்டம் அடுத்த சித்திரையிலிருந்து ஆவணி வரையான சிறுபோகத்தில் வடக்கில் நடை முறைக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

இதனுல் இவ் வருட சிறு போகத்தில் நாடு உப உணவுற்பத்தியில் ஓரளவு தன்னிறைவு பெறும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது, சிறுபோகத்திற்கு வடக்கில் நெல் பயிரிடுவது நிறுத்தப் பட்டு சகல தோட்டங்களிலும் பயறு, உழுந்து, மிளகாய், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், நிலக் கடலை ஆகிய உப உணவுப்பயிர்கள் பயிரிடப்படும்

நெல் உற்பத்திக்கு ஒரு ஏக்கருக்கு பாய்ச்சப்படும் தண்ணீரில் மூன்று ஏக்கர் உப உணவுப் பயிர்கள் பயிரிடப் பட முடியுமென்றும், நெல் உற்பத்தியிலும் பார்க்க இதற்கு செலவு குறைவாகவும், வருவாய் அதிகமாகவும் இருக்குமெனவும், இதனுல் நாடு உப உணவுற்பத்தியில் தன்னிறைவு பெறும் எனவும் புள்ளி விபரங்கள மூலம் கணக்கிடப் பட்டுள்ளதாலேயே இத் திட்டம் அமுலுக்குக் கொண்வரப்பட்டுள்ளது

இத் திட்டத்தால் நாடு நன்மை பெறும் என்றும், தனிப்பட்ட விவசாயிகள அதிக லாபம் பெறுவர் என்றும் உதவி அரசாங்க அதிபர் திரு முருகேசம்பிள்ளை தெரிவித்தார்

இது சம்பந்தமான பிரசார ஆலோசனைக் கூட்டங்கள இம் மாத இறுதியில் இரணைமடு, கல்மடு, வவுனிக்குளம், அக்கராயன்குளம், துணுக்காய் பகுதியில் நடைபெறவுள்ளது (கா நி)

# சாவகச்சேரித் தொகுதியில் பொலிஸ் உஷார் நடவடிக்கை

## அரசியல் கூட்டங்கள், ஒலிபெருக்கி - கட்டுப்பாடு

### பொலிஸ் அதிகாரி கூட்டிய மாநாடு

[ நமது காரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம் ]

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற கைகலப்புகள், விபத்து, அசம்பாவிதங்கள் சம்பந்தமாகவும் இவை போன்று இனியும் நேராமல் தடுக்க நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாகவும் ஆராய்வதற்கான உயர்தர அதிகாரிகளின் மகாநாடு ஒன்று நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் நடைபெற்றது.



...ன்டன் தெரிவித்தார்

...வகச்சேரித் தொகுதியில் பின்வரும் ஒழுங்குகளை மீறுபவர்களைக் கைது செய்து றிமான்டில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

...ரசியல் கூட்டங்களுக்கு



## 'டிக்கட் போட வெளிச்சம் இல்லை'

### அதனுல் பிரயாணியை ஏற்றவில்லையாம் கண்டக்டர்

யாழ்ப்பாணம், சனி

தவறவிட்ட பஸ்ஒன்றைப் பிடிப்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து தாவடிவரை டாக்ஸியில்சென்ற பிரயாணி ஒருவரை கண்டக்டர் ஏற்ற மறுத்தாராம். பஸ்ஸில் 'டிக்கட்' போடுவதற்கு 'வெளிச்சம்' இல்லை என்று அவர்காரணமும் கூறினுராம்:

இ.போ. ச. மேலிடத்திற்குச் செய்யப்பட்டுள்ளபுகார் ஒன்றிலிருந்து மேற்கண்ட தகவல்கள் தெரியவந்துள்ளன.

கடந்த 11ந்திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்கு காங்கேசன்துறை ஊடா இரவு 9-30 மணிக்கு சென்ற இ போ ச பஸ்ஸை தவறவிட்ட குறிப்பிட்டபிரயாணி டாக்ஸி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு யாழ்... ண்டு தாவடிவரை சென்று குறிப்பிட்ட பஸ்ஸைமறித்து ஏறியபோது, கண்டக்டர் டிக்கட்போடுவதற்குவெளிச்சம் இல்லை என்று காரணம் கூறி பிரயாணியை ஏற்ற மறுத்துவிட்டாராம்.

இச்சம்பவம் குறித்து பிரயாணிகள் சிலருக்கும் கண்டக்டருக்குமிடையே வாக்குவாதம் தொடரவே பிரயாணம் செய்துகொண்டிருந்த மற்றைய பிரயாணிகளையும் அவ்விடத்தில் இறங்கும்படி கண்டக்டர் வற்புறுத்தினுராம். பிரயாணிகள் இறங்க மறுக்கவேபஸ் புறப்பட்டது டாக்ஸியில் பஸ்ஸை பிடிக்க வந்த பிரயாணி மீண்டும் வாடகைக்கார்ஒன்றை அமர்த்தி அவர் செல்லவேண்டிய இடமான மல்லாகத்துக்கு போய்ச்சேர்ந்தாராம்.

# மாங்குளத்தில் துப்பாக்கிச் சூடு: இருவர் கவலைக்கிடம்

## சுடடா என்றதும் சூடு விழுந்ததாம்

## நால்வரைப் பொலிசார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், சனி

நேற்று முன்தினமிரவு மாங்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இரண்டு வாலிபர்கள் படுகாயமடைந்து யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மாங்குளத்தைச் சேர்ந்த ஏ. நித்தியானந்தன் (28 வயது) கே. நடராஜா (24 வயது) ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்களாவர்.

மரக் கூட்டுத்தாபன விற்பனை சம்பந்தமாக நடைபெற்ற வாக்குவாதத்தின் பின்னரே இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவம்நடைபெற்றதாகபொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நடராஜா ஆபத்தான நிலையிலிருந்ததால் யாழ்ப்பாணம் தற்காலிக மாஜிஸ்திரேட் திரு. எஸ். கனகரத்தினம் ... நேற்றுக் காலையே அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

கிளிநொச்சி குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. கதிர்காமநாதன் பூரண விசாரணையை மேற்கொண்டுள்ளார். (கா. நி)

நமது மாங்குளம் நிருபர் அறிவிப்பதாவது:

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சம்பந்தமாக நால்வரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். மாங்குளத்தில் கடந்த வருடம் நடைபெற்ற முக்கொலைச் சம்பவத்திற்குப் பின்னர் நடைபெற்ற மிகப் பெரிய சம்பவம் இதுவெனப் பொலிஸார் தெரிவித்தனர். மாங்குளத்தில் மார்ச் மாதம் முதலாந்திகதி புதிய பொலிஸ்நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஆக்க வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. கட்டிட வேலைகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

# "போராட்டத்தின் மூலமே தமிழர் உரிமை பெறலாம்"

—ஊர்கர்வற்றுறை எம்.பி.

மண்டைதீவு, வெள்ளி

'ஆட்சிமன்றம் செல்வதன் மூலமோ, தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் கூட்டுச்சேர்வதன் மூலமோ தமிழினம் தனது உரிமைகளை இழக்க நேருமே தவிர உரி... ந்து பேசுகையில், 'திரு கலுகல்ல கல்விமந்திரியாக இருந்தபொழுது இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்களை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்ப இந்த அரசாங்கம் முயன்றபோது நாம்கொடுத்த எதிர்ப்புத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளை.

கடந்த 11ந் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்கு காங்கேசன்துறை ஊடாக இரவு 9-30 மணிக்கு சென்ற இ.போ.ச பஸ்ஸை தவறவிட்ட குறிப்பிட்ட பிரயாணி டாக்ஸி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு யாழ். தட்டாதெருச் சந்தி வரை சென்றபோது பஸ் அங்கு நின்றதாகவும், ஆனால் இவரை ஏற்றுமல் பஸ்புறப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது. மீண்டும் மற்றொரு டாக்ஸியை பிடித்துக்கொ ராம். பிரயாணிகள் இறங்க மறுக்கவேபஸ் புறப்பட்டது டாக்ஸியில் பஸ்ஸை பிடிக்க வந்த பிரயாணி மீண்டும் வாடகைக்கார்ஒன்றை அமர்த்தி அவர் செல்லவேண்டிய இடமான மல்லாகத்துக்கு போய்ச்சேர்ந்தாராம்.

பஸ்ஸில் பின்னர் லைட் எரிந்ததாகவும் கூறப்படுகிறது

இதுசம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி குறிப்பிட்ட பிரயாணி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளார்.

# துறைமுக ஊழியர் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வர்

கோட்டை, வெள்ளி

கொழும்பு துறைமுகத்தைச் சேர்ந்த ஏழு தொழிற் சங்கங்கள் இன்று கூடி தொடர்ந்துவேலைநிறுத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது. பிரதமர் சலுகைகள் அளிக்க முன்வந்த போதிலும், தொழிற் சங்கங்கள் அதற்குச் செவி சாய்க்காது வேலை நிறுத்தத் தொடர முடிவு செய்திருப்பதாக அரசாங்க அறிக்கை ஒன்று கூறியது.

வேலை செய்யும் ஊழியர்களுக்கும், வேலைக்குத் திரும்பும் ஊழியர்களுக்கும் ஆகக் கூடிய பாதுகாப்பு அளிக்கப்படுமென்று துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உருட்டி மிரட்டி குழப்பத்தை ஏற்படுத்த முயல்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

## வண. தனிநாயகம் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

உலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் ஆதரவில் வண. பிதா சேவியர் தனிநாயகம் இம்மாதம் 22-ம் திகதி மாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழும் ஆராய்ச்சியும் என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.



வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடபெற்ற இம்மகாநாட்டில் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்கள் திரு. எஸ். பி. டி. சில்வா, திரு. இராஜகுரு. சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், முன்னுள் எம். பி. திரு வே குமாரசாமி ஆகியோர் கலந்துகொண்டனர் சாவகச்சேரித் தொகுதியில் எந்த அரசியல் கட்சிக் கூட்டத்தையும் இரவு 11 மணிக்குப் பின்னர் நடத்த அனுமதிப்பதில்லை எனவும், கூட்டங்களுக்கு மட்டுமே ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி வழங்கப்படுமென்றும் வீதிகளில் அறிவிப்புக்கு ஒலிபெருக்கி அனுமதி வழங்கப்படாதென்றும் மகாநாடு முடிவில் பொலிஸ் சுப்

...டன் தெரிவித்தார்

...சாவகச்சேரித் தொகுதியில் பின்வரும் ஒழுங்குகளை மீறுபவர்களைக் கைது செய்து றிமான்டில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசியல் கூட்டங்களுக்கு மதுபோதையில் செல்லக் கூடாது

கூட்டங்களில் குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்கக் கூடாது

அநாவசியமாக எந்தக் கேள்வியையும் பேச்சாளரிடம் கேட்கக்கூடாது

பயமுறுத்தும், அவமானப்படுத்தும், இழிவுபடுத்தும் சொற்களைக் கூட்டங்களில் பேசும்போது பாவிக்கக் கூடாது

கூட்டங்களில் கல்வீச்சு நடாத்தக்கூடாது

வீதிகளுக்குக் குறுக்கேயும் ஒழுங்கைகளிலும், மின்சாரககம்பம், தந்திககம்பங்களிலும் எந்த அரசியல் கொடியையும் கட்டக கூடாது

வீதிகளிலும், சந்திகளிலும் கூட்டமாக நின்று அரசியல் பேசககூடாது

இ.போ.ச பஸ்களில் கண்டகடர்கள், பிரயாணிகளுடன் அரசியல்பேசுவதாகவும் இது தவிர்ககப்படல்வேண்டும் என்றும் இம்மகாநாட்டில் திரு வி குமாரசாமி வற்புறுத்தினுர் இதுபற்றி கடும் நடவடிககை எடுப்பதாக உறுதியளித்த பொலிசார் இதுவிஷயத்தை வடபிராந்திய இ.போ.ச அதிகாரிககும் அறிவித்துள்ளனர்

### கைகலப்பில் மூவர் காயம்

இச்சமரச மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக கொண்டிருந்த அதேவேளையில் சாவகச்சேரிச் சந்தையில் இரு பகுதியினருககிடையே கைகலப்பு நடைபெற்றதாகவும்,



மூன்று பேர் இககைகலப்பில் படுமோசமாகத் தாககப்பட்டதாகவும் பொலிஸ் தலைமககாரியாலயத்துககுத் தகவல் கிடைத்தது.

### பிணையில் செல்ல அனுமதி

பொங்கல் தினத்தன்று சாவகச்சேரியில் நடைபெற்ற லொறி விபத்தில் கைதான லொறிச்சாரதி நேற்று முன்தினமே மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் பிணையில் செல்ல அனுமதிககப்பட்டார் (கா நி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நடராஜா ஆபத்தான நிலையிலிருந்ததால் யாழ்ப்பாணம் தற்காலிக மாஜிஸ்திரேட் திரு. எஸ். கனகரத்தினம் அவரது வாக்குமூலத்தை நேற்றுக் காலை யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் வைத்துப் பதிவுசெய்தார். ஒருவர் 'சுடடா' என்று சொல்ல மற்றொருவர் சுட்டதாக வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டது.

இருவரது நிலையும் கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. நடராஜா

---

### இளம் பிள்ளை வாதநோய்

கோப்பாய், வெள்ளி

கடந்த சிலநாட்களுக்கு முன்னர் பெய்தஅடை மழையைத்தொடர்ந்து மீண்டும் இப்பகுதியில் இளம் பிள்ளை வாதநோய் தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றதாம். இது குறித்து சுகாதாரப் பகுதியினர் தடுப்புமருந்து விநியோகித்து வருகின்றனர்.

# தேசியசுவீப்முடிவுகள்

கொழும்பு, சனி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 281-வது சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு

39 B 0513 - ரூ. 100,00

2-வது பரிசு

06 M 0674 - ரூ. 40,000

3-வது பரிசு

10 F 0216 - ரூ. 10,000

ரூ. 699-80 சதம் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 10 J 0094 | 27 N 0403 |
| 14 E 0931 | 24 J 0557 |
| 36 L 0452 | 34 U 0101 |
| 02 C 0095 | 31 H 0198 |
| 22 Q 0628 | 12 S 0473 |
| 05 L 0205 | 23 Z 0936 |
| 30 N 0611 | 20 E 0089 |
| 14 J 0726 | 22 B 0371 |
| 44 Q 0311 | 03 Z 0001 |
| 05 H 0135 | 25 S 0486 |
| 12 N 0956 | 28 S 0962 |
| 11 H 0716 | 43 P 0170 |
| 09 E 0809 | 43 D 0633 |
| 23 X 0591 | 02 C 0710 |
| 05 L 0629 | 27 Q 0594 |
| 35 J 0863 | 11 U 0200 |
| 23 A 0228 | 08 K 0572 |
| 15 A 0897 | 31 F 0155 |
| 07 Q 0508 | 44 P 0761 |

| | |
|---|---|
| 17 G 0019 | 40 Z 0620 |
| 13 S 0180 | 03 A 0487 |
| 03 A 0268 | 03 N 0651 |
| 42 A 0864 | 10 U 0887 |
| 14 W 0468 | 13 E 0580 |
| 20 B 0603 | 14 T 0494 |
| 02 Y 0560 | 08 D 0509 |
| 32 X 0115 | 08 Z 0570 |
| 36 N 0460 | 43 B 0676 |
| 14 Z 0573 | 02 F 0316 |
| 40 U 0660 | 25 T 0006 |
| 33 S 0246 | 32 P 0795 |
| 21 Z 0145 | 19 G 0196 |
| 29 Z 0979 | 24 R 0539 |
| 18 U 0079 | 44 O 0200 |
| 43 V 0623 | 28 G 0631 |
| 13 O 0667 | 02 E 0839 |
| 14 N 0229 | 01 T 0511 |
| 27 P 0502 | 13 N 0633 |
| 06 X 0712 | 23 D 0484 |
| 31 V 0155 | 23 G 0489 |
| 19 E 0748 | 43 F 0268 |
| 30 X 0410 | 18 W 0276 |
| 24 S 0365 | 05 Z 0347 |
| 38 R 0032 | 29 U 0926 |
| 26 Q 0273 | 23 G 0480 |
| 30 A 0784 | 31 M 0828 |
| 27 Z 0306 | 12 J 0699 |
| 19 G 0177 | 16 J 0604 |
| 06 J 0154 | 08 C 0457 |
| 36 P 0049 | 34 Y 0282 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

# கடற்தொழில் உருக்கு கூட்டுத்தாபன ஊழியர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

கோட்டை, வெள்ளி

வேலைநிறுத்தம் செய்து வந்த கடத்தொழில், உருக்குக் கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் நாளை வேலைக்கு திரும்புகின்றனர். இதுவரை நாளும் இயங்காமலிருந்த முகத்துவாரம் கடற்தொழில் கூட்டுத்தாபன மத்திய அலுவலகம் நாளை முதல் இயங்கும்.

கடந்த நாற்பத்தொரு நாட்களாக வேலை நிறுத்தம் செய்துவந்த இலங்கை உருக்கு கூட்டுத்தாபன ஊழியர் வேலைநிறுத்தத்தை கைவிட்டனர்.

கைத் தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனுவுககும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையில் சமரசம் ஏற்பட்டதை தொடர்ந்து வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்ப சம்மதம் தெரிவித்தனர்.

ஊழியர் ஒருவர் மீது நடவடிக்கை எடுக்குமுன் ஓர் குழுவினுல் அவர்மீது பாரபட்சமற்ற விசாரணை நடாத்தப்பட வேண்டுமென்றும் அதன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற தொழிற் சங்கங்களின் கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

### கடற் தொழில் கூட்டுத்தாபனம்

கடற்றொழிற்கூட்டுத்தாபன ஊழியர் வேலைநிறுத்தமும் இன்று கைவிடப்பட்டது. 8 தொழிற் சங்கங்களைச் சேர்ந்த 1700 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து வந்தனர். கூட்டுத்தாபனத்துக்கு எவ்வித சிரமமும் கொடுக்காது வேலை செய்வதாக தொழிற் சங்கங்கள் உறுதி தெரிவித்துள்ளன. 3-ம் திகதி நடந்த கலக சம்பவங்கள் போன்று இனி நடக்காது எனவும் உறுதி தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சனசமூக நிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. நவநீதராஜா, உப தலைவர்: திரு: சு. குணம், இணைச் செயலாளர்கள்: திரு. தி: யோகசாமி, திரு: கோ: துரைசிங்கம், பொருளாளர்: திரு: மா: செல்லம்: நிர்வாக உறுப்பினர்கள்: திருவாளர்கள் க. தம்பு, தி. மார்க்கண்டு, செ: இராசதுரை, நா.பூபாலசிங்கம், செ. சண்முகரத்தினம், கி: தம்பித்துரை.

### 'வர்த்தக ஆசிரியரை அதிகரிக்குக'

பருத்தித்துறை, வெள்ளி

பலாலி ஆசிரியர் பயிற்சிகலாசாலை வர்த்தகப்பயிற்சிக்கு ஆசிரியரையும் ஆசிரியரல்லர தோரையும்வருடாவருடம் கூடுதலாக எடுக்க வேண்டுமென அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் ம்லைமன்றம் கல்வியமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. ஈரிய கொல்லையைக்கேட்டுள்ளது.

நாட்டின் வர்த்தக சேவை விஸ்தரிக்கப்பட வேண்டுமாயின் வருடா வருடம் குறைந்தது 40 பயிற்சியாளர் தெரிவுசெய்யப்படல் வேண்டுமெனமன்றம் தனது மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

மண்டைதீவு, வெள்ளி

'ஆட்சிமன்றம் செல்வதன் மூலமோ, தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் கூட்டுச்சேர்வதன் மூலமோ தமிழினம் தனது உரிமைகளை இழக்க நேருமே தவிர உரிமைகளைப் பெறமுடியாது. கடந்தகாலம்இந்த உண்மையைத் தமிழினத்துக்கு நிரூவித்துவிட்டது. ஆட்சிமன்ற ஆசனங்களில் தமிழினத்தைக் காட்டிக்கொடுப்பவர்களை இருப்பதற்கு நாம் அனுமதிககக்கூடாது. இதற்காகவேதான் எமது கழகமும் தேர்தலில் குதிக்கவேண்டியுள்ளது இடைவிடாத போராட்டத்தின் மூலமே தமிழினம் தனது உரிமைகள் பறிபோகாமல் தடுக்கமுடியும்'.

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகத்தலைவரும், ஊர்காவற்றுறை எம் பி யுமான திரு வ நவரத்தினம் நேற்று மண்டைதீவில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார் மண்டைதீவு தமிழர் சுயாட்சிக்கழகக் கிளையின் சார்பில் கிளைத்தலைவர் திரு சி சோமசேகரம் தலைமையில் நடைபெற்றது திரு நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில், 'திரு கலுகல்ல கல்விமந்திரியாக இருந்தபொழுது இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்களை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்ப இந்த அரசாங்கம் முயன்றபோது நாம்கொடுத்த எதிர்ப்புத்தான் அத்திட்டத்தை தடுத்து நிறுத்தியது ஆனால் இன்று அதே திட்டத்தை யு என் பி யுடன் கூட்டுச் சேர்ந்த தமிழரசார் ஏற்றுக் கொண்டபோது அதைத் தனித்துநின்று எதிர்த்தேன் இதிலிருந்தே கட்சியின் போக்கை நான் உணரத் தொடங்கினேன். இதன்பின்னரே இவர்களது நடவடிக்கைகள் எதற்கும் நான் ஒத்துழைப்புக்கொடாது தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நாளுவது காப்பாற்றவேண்டுமென்ற நோக்குடனேயே தமிழினத்தின்சார்பில் ஆட்சிமன்றத்தில்எனது கடமையைச் செய்தேன்' என்று கூறினுர்.

மற்றும் திரு. க சிவானந்த சுந்தரம், திரு க சதாசிவம், திரு பொன்கைவேந்தன், திரு தா மகேஸ்வரன், திரு இ தில்லைநாதன், திரு ப ஸ்ரீபதி ஆகியோர் உட்படப் பலர் பேசினர்

# ''போராட்டம் பயனளிக்காது; சேர்ந்தே உரிமைபெறலாம்''

யாழ்ப்பாணம், சனி

'போராட்டம் என்று சொல்லி தமிழ்மக்களை இனியும் ஏமாற்றமுடியாது. கடந்த 14 வருடங்களாக போராட்டம் என்ற பெயரில் தமிழினம் பொருளாதார உரிமைகளை இழந்துவிட்டது.

இவ்வாறு நேற்று முன்தினம் கோயிலாக்கண்டியில் நடைபெற்ற அகிலஇலங்கை தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணிக்கிளைக் கூட்டத்தில் முன்னுள் சாவக்ச்சேரி எம். பி. திரு. வே. குமாரசாமி பேசும் போது கூறினுர்.

திரு சி. கிருஷ்ணபிள்ளை தலைமையில்நடைபெற்றஇக் கூட்டத்தில் திரு. குமாரசாமி மேலும் பேசுகையில், 'அரசாங்கத்துடன் ஒத்துழைத்தே எமது இழந்த உரிமைகளையும் பொருளாதார முன்னேற்றங்களையும் வளர்ச்சியடையச் செய்யவேண்டும் என்றும், சிங்கள மக்களைப் பகைத்துக்கொண்டு எதையும் சாதிக்கமுடியாதென்றும் கூறினுர்.

மற்றும் வழக்கறிஞர் திரு: சி. பொ. மயில்வாகனன், செல்வி நளாயினி சிவசுப்பிரமணியம், செல்வன் இராச குலேந்திரன் ஆகியோரும் பேசுனர்.

### நாளை திறப்பு விழா

உடுப்பிட்டித் தொகுதிக் காரியாதிகாரி கந்தோா திறப்பு விழா எதிர்வரும் 18-ம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறும். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் புதிய காரியாதிகாரி கந்தோரைத் திறந்து வைப்பார். இக்காரியாதிகாரி கந்தோர் எதிர்வரும் 22-ம் திகதியே திறந்துவைக்கப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அரசாங்க அதிபரின் சௌகரியத்தைப்பொறுத்து திறப்பு விழா குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு உடுப்பிட்டிக் காரியாதிகாரிபிரிவில் அடங்கும். உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கிராமசேவையாளர்கள் இக்காரியாதிகாரி கந்தோர் மூலம் செயற்படுவார்கள். வதிரி செல்லையா பாடசாலை (வட சென்றல்) முன்பாக இக்காரியாதிகாரி அலுவலகம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நவீன ஜேர்மன் எந்திர சாதனங்களால் தயாரிக்கப்பட்ட திறமான ஒட்டக மார்க் செங்கற்கள் விற்பனைக்குண்டு. ஜனு செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 1773


## 'சின்னஞ்சிறு கதைகள்'

யாழ்ப்பாணம், சனி

"திரு ச.வே. பஞ்சாட்சரம் எழுதி வெளிவந்தமூன்ருவது நூலான இச் 'சின்னஞ்சிறு கதைகள்' அவரிடத்தில் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. அதாவது நல்ல கருத்துக்களைக் கூறுவதோடு மட்டும் நிறுத்தி வந்த இவர், இப்போது தாம் வாழும் சமுதாயத்தை உற்று நோக்கவும், அங்கு பெருகிக்கிடக்கும் பிரச்சனைகளையும், துன்பம், துயரங்களைக் கண்டு மனங்குமுறவும் தொடங்கிவிட்டார். இந் நூலில் இடம் பெறும் கதைகள் சமூகத்தைச் சீர்திருத்தவும், சமுதாயரீதியில் மாற்றத்தைத் தூண்டவும் அவர் மனம் விழைவதைப் பிரதிபலிக்கின்றன" பொங்கலன்று இணுவில் பரமானந்த நூல் நிலையத்தில் திரு ப. ஆனந்த மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற, திரு ச. வே. பஞ்சாட்சரத்தின் 'சின்னஞ்சிறு கதைகள்' நூலறிமுக விழாவில் பிரபல எழுத்தாளர் தேவன் இப்படிக் குறிப்பிட்டார்.

திரு ச.ஸ்ரீரங்கன் வரவேற்புரை கூறினர். திருவாளர்கள் சபா.ஜெயராசா, க நவரத்தினம், 'கிணறுகாவி', இராசேந்திரம் ஆகியோரும் நூல் ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

## யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

ஆஸ்பத்திரி வீதியில் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் புத்தகத்துடன், கல்வி தராரப் பத்திரம் போன்ற தஸ்தாவேஜுக்கள் கே. எம் அத்துகாதர் என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

0 0 0

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட லைசென்ஸ் உடன் மணிபர்ஸ் ஒன்று கல்வயலைச்சேர்ந்த மா.மனோகரன் என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## பழுது

கோப்பாய், வெள்ளி

கோப்பாய்-யாழ்ப்பாணம் சேவையிலீடுபடும் இரட்டைத்தட்டு பஸ்கள் அடிக்கடி சேவையிலீடுபடாததால் இப்பகுதி பஸ் பிராயாணிகள் பெரிதும்சிரமமடைகின்றனர். இது குறித்து கோப்பாய் பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

## தமிழரசுகட்சி 22-ல் கூடுகிறது

அல்லைப்பிட்டி, வெள்ளி

இம்மாதம் பதினைந்தாம் திகதி நடைபெறவிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் இருபத்திரெண்டாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வேலணையில் உள்ள பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி.யின் இல்லத்தில் நடைபெறும் இக் கூட்டத்திலும், இதைத்தொடர்ந்து வேலணை வங்களாவடிதிறந்த வெளியரங்கில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் கட்சி எம்.பி.க்கள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றுவர்.


## திருமண அழைப்பு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 3-ம் இலக்க 'சோமகத்'தைச் சேர்ந்த சோமசுந்தரம் (முன்னுள் மீன்பிடி திணைக்களத்தைச் சேர்ந்தவர்) திருமதி சோமசுந்தரம் ஆகியோரின் புத்திரி திருநிறை செல்வி மாலதிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரி. கந்தையா (நில அளவையாளர்) திருமதி கந்தையா ஆகியோரின் மகனும் கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளருமான திருநிறை செல்வன் அரசலிங்கத்திற்கும், 1970 ஜனவரி மாதம் 19-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் திருமணம் நடைபெறும்.

அத்தருணம் நண்பர்களும் உறவினர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியேகுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனித்தனி அழைப்புகளில்லை. 1479


# நயினதீவு கடலில் தவறி வீழ்ந்தவர் மரணம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

நயினதீவு துறைமுக பால முகப்பில் படகிலிருந்து பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த வாலிபர் ஒருவர் பாலத்தின் விழிம்பிலிருந்து எதிர்பாராத விதமாக கடலில் வீழ்ந்ததினுல் மரணமானுர். பெரும் அலைகளினுல் சிறிது தூரம் அள்ளிச் செல்லப்பட்ட இவர் நடுக்கடலில் மரணமானுர்.

நயினதீவு 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம் (வயது இருபது) என்பவரே இவ்விதம் பரிதாபமான மரணத்தை அணைத்துக்கொண்டவர். இவரது மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய நயினதீவுப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி கடலில் வீழ்ந்து மூச்சுத்திணறியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பு வழங்கினுர்.

பருத்தித்துறை ந ச. தேர்தல்

## பணம் கொடுத்து வாக்குப் பெற முயன்ருராம்; வழக்குதாக்கல்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபையின் 5ம் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றவரான பிரான்சிஸ் வின்சென்டீபோல் என்பவர் அனுராதபுரம் பிரதானவீதியில் வசிக்கும் அதேவட்டார வாக்காளரான கே. முருகேசம்பிள்ளை என்பவருக்கு ரூபா 10 மணிஓடர் அனுப்பி தனக்கு வாக்களிக்கும் படி கேட்டார் என்ற கைலஞ்சக் குற்றச் சாட்டின் பேரில் அதே வட்டாரத்தைச் சேர்ந்த யேசேப் மரியதாஸ் அல்பிரட் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் புறக்டர் திரு எம். மேலும்மயிலும் மூலம் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மாஜீஸ்திரேட் வழக்கை விசாரணைக்காக அடுத்த மாதம் 12 ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

5ம் வட்டார அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்ட பி.வின்சென்டீபோல் என்பவர் அவருடன் போட்டியிட்ட ஈ.அருளானந்தத்தை 3 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றவர்.

## 'திருமலையில்பல்கலைக்கழகம் எமக்கு நன்மை தராது'

அல்லைப்பிட்டி, வெள்ளி

"தமிழ்பேசும் மக்களுக்கோர் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக் கழகம் வட மாகாணத்தில் நிறுவுவதற்காக தமிழ்க்காங்கிரஸ் கட்சி அயராது பாடுபட்டு வருகின்றது" என தமிழ்க்காங்கிரஸ் கட்சி காரைநகர் வாலிப முன்னணிகூட்டத்தில் பேசும்போது கட்சிச் செயலாளர் வழக்கறிஞர் ரி, சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில் திரு. கனகசபை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சங்கரப்பிள்ளை மேலும் பேசுகையில் கிழக்கு மாணாணத்தில் தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவப்படமாட்டாதென்பதை நன்கு தெரிந்தபின்னரும்கூட சிலர் விசமத்தனமாக வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவப்படக்கூடாதென்று எதிர்க்கின்ருர்கள். தமக்குக் கிடைக்காத காரியம் பிறருக்கு கைகூடிவிடக்கூடாதென்பதே இவர்களின் அந்தரங்க நோக்கமாகும். திருகோணமலையில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டால் அப்பல்கலைக் கழகத்திஞல் வடபகுதி மாணவர்களும்நன்மை கிடைக்கமாட்டாது. இதனுல் தான் எமது கட்சி மட்டுமல்ல பல அறிஞர்களும் வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவும்படி வற்புறுத்தி வருகின்ருர்கள் என்று கூறினுர்.

## மறைந்து...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது:

"இந்த வைத்தியம் எப்பொழுது தோன்றியதென்று கூறமுடியாது. அது வாழையடி வாழையாக ... மக்களின் ... பிடித்துள்ளது சித்தவைத்...

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 17—1—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: காலை 7-30. கல் 12-03, இரவு 10-00. டபகல் 1-00 மாதர் கேட்வை.

மாலை 6-15 பாமாலை.

குஇரவு 7-15 புல்லாங்பழல் — இராமசுவாமி ஐயர், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம்.

## பிரயாணிகளுடன் பள்ளத்தில் பாய்ந்தது பஸ்

அல்லைப்பிட்டி, வெள்ளி

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டியொன்று கரம்பன் மூன்ரும் கட்டையடியில் வீதியை விட்டுவிலகி பள்ளத்தில் பாய்ந்தது.

மாணவர்கள் உட்படப் பல பிரயாணிகள் பஸ்ஸில் இருந்தனர். எவருக்கும் பலத்தகாயம் ஏற்படவில்லை. சாரதியின் கவலையீனமே இவ்விபத்துக்குக் காரணமென பேசிக்கொள்ளப்படுகிறது.

## சென் பீற்றஸ் வென்றது

நவாலி, வெள்ளி

நவாலி சென். பீற்றஸ் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் சம்சுன் கோஷ்டிக்குமிடையில் ஜின்னு மைதானத்தில் நடந்த பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நவாலி சென். பீற்றஸ் கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு தி . ஜெயராசா மத்தியஸ்தம் வகித்தார்.

திரு. அல்பிரட் துரையப்பா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வீரர்களைப் பாராட்டினுர்.



## சம்பளத்துடன் மீண்டும் நியமனம்

பருத்தித்துறை, வெள்ளி

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் யாழ்தொழில் நுட்பக் கல்லூரி சிற்றூழியராகக் கடமையாற்றி வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த திரு எஸ். சுந்தரத்துக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

அவர்மீது சுமத்தப்பட்ட 5 குற்றச்சாட்டுக்கள் சரிவர நிரூபிக்கப்படவில்லையாதலால் அவர் வேலையற்றிருந்த காலச் சம்பளத்தையும் வருட உயர்ச்சித் தொகையையும் கொடுக்குமாறும் பொதுச் சேவைச் சபை தீர்ப்பு வழங்கியுள்ளது.

## இலங்கை டாக்டருக்கு அங்கத்துவம்

கோட்டை, வெள்ளி

இலங்கைப்பல்கலைக்கழகப் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் ஏச். பி. ஏ. விஜயதுங்கா உள நோய் மருத்துவ சர்வதேசசபைக்கு அங்கத்தவராகத்தெரிவு செய்யப்பட்டுள்ளரர்.


வல்வெட்டித்துறை
**றஞ்சனு தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
**சைனு டவுண்**
[ஹிந்தி]
4-30க்கு மட்டும்
KARATE KILLERS

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 630 930
பிறிப்போயா, போயா2-30 மணி
ஜெமினி—வையந்திமாலா
நடித்த
**பார்த்திபன்கனவு**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி—பத்மினி
நடித்த
**பாலாடை**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
**ஒளிவிளக்கு**

**மனோகரா**
யாழ்ப்பாணம்


கரவெட்டியில் பொலிஸ் நிலையம்:

## பௌத்த மதத்தினருக்கு பாதுகாப்பு வேண்டுமாம்

பருத்தித்துறை, வெள்ளி

கரவெட்டிப் பகுதியில் பௌத்த மதத்தவரும், சிங்கள-பௌத்த பாடசாலையும் விகாரையும் இருப்பதால் இங்கு பௌத்த பீடாதிபதிகள் அடிக்கடிவந்து போக வேண்டியுள்ளது. அவர்களின் பாதுகாப்புக்கும் பௌத்த மதத்தவரின் பாதுகாப்புக்குமாகக் கரவெட்டிப் பகுதியில் ஒரு பொலிஸ் நிலையம் நிறுவப்படவேண்டியது அவசியமென்று செனெற்சபைத் தலைவர் திரு. இரத்நாயக்கா தலைமையில் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலெரிக் அபயகுணவர்த்தனவைப் பேட்டிகண்ட ஒரு குழு தெரிவித்தது. இக்குழுவில் பௌத்த சேவா சங்கத் தலைவி திருமதி இரத்னகுணதிலகா, கரவெட்டி ஸ்ரீநாரத பௌத்த பாடசாலை அதிபர் திரு. எஸ். கே. இராசரத்தினம் ஆகியோடும் இடம் பெற்றனர். இதுவிடயமாக ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கேட்கப்பட்டுள்ளார்.


**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்; நாகேஷ்; சரோஜாதேவி
மற்றும்பலர் நடித்த
**அஞ்சல் பெட்டி 520**

**ராணி** (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
**அடிமைப் பெண்**

6வது வெற்றி வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
**திருவருட் செல்வர்**
[ஈஸ்ட்மென் கலர்]

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)
நடிகர் திலகம்
★ சிவாஜிகணேசன்
நாட்டியப்பேரொளி
★ பத்மினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் திருமணம் நடைபெறும்.

அத்தருணம் நண்பர்களும் உறவினர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியேகுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனித்தனி அழைப்புகளில்லை.

1479

கலைக் கழகம் நிறுவப்பட மாட்டாதென்பதை நன்கு தெரிந்தபின்னரும்கூட சிலர் விசமத்தனமாக வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவப்படக் கூடாதென்று எதிர்


# சகதி வாய்ந்த சர்வ பூச்சி நாசினி

# பொலிடோல் ஈ605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்து விடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது — பொலிடோல்.

பொலிடோலின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

100 ஸி. ஸி. ( 4 அவுன்ஸ்) விலை = ரூ. 5/-
250 ஸி. ஸி. ( 9 அவுன்ஸ்) விலை = ரூ. 10/-
1000 ஸி. ஸி. (35 அவுன்ஸ்) விலை = ரூ. 35/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

ஏ 9/69


கூறியதாவது:

''சித்த வைத்தியம் எப்பொழுது தோன்றியதென்று கூறமுடியாது. அது வாழையடி வாழையாகத் தமிழ் மக்களின் வாழ்க்கையோடு பிணைந்துள்ளது சித்தவைத்தியத்திற்கும், சைவ சமயத்திற்கும் நிறைந்த தொடர்புண்டு. சித்த வைத்தியம், தென்னாட்டிலிருந்து இறக்குமதியானதல்ல. இலங்கைத் தமிழ் மன்னர்கள், சித்த வைத்தியத்துறையில் வல்லவராய் மிளிர்ந்தனர். 'இராச வைத்தியர்' நல்லூர் செகராஜசேகர மன்னர் பரம்பரையில் தோன்றியவர். சித்த வைத்தியம் தமிழ் மக்களின் தனியுடைமையாகும். யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியக்கல்லூரியையும், சித்த வைத்திய நிலையத்தையும்நிறுவுவதற்கு முன்னோடியானவர் திரு. அ. க குமாரசாமியாவர்.''

பாராட்டு விழா மலரை யாழ்ப்பாண மரியா உணவு விடுதிச்சாலை முதல்வர் திரு. ஜே. மரியாம்பிள்ளை பெற்றுக்கொண்டார்.

மலர் வெளியீட்டு வைபவத்தைத் தொடர்ந்து பாராட்டுரை வழங்கிய ஆட்சிமன்ற உப-சபாநாயகர் திரு எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

''இராச வைத்தியரின் சேவையினால் குணமடைந்த மன நோயாளர் பலர். மேல்நாட்டு மருத்துவத்திற்குச் சித்த வைத்தியம் சளைத்ததல்ல என்பதை நிரூபித்த பெருமை 'இராச வைத்தியரையே' சாரும். சித்தவைத்தியம் வளர, வைத்தியத் துறையிலுள்ள முறைகளை இரகசியமாக வைத்திருக்காமல், பலரும் அறியும் வண்ணம் வெளியிடவேண்டும். மேல்நாட்டு மருத்துவம் புகழேணியில் இருப்பதற்கு, வைத்திய முறைகள் குடும்பச் சொத்தாக, இரகசியமாக இல்லாமல் பலரும் அறிய வெளிவருவதே காரணம்.''

வைபவத்திற்கு பண்டிதர் க. மயில்வாகனம் தலைமை தாங்கினார். விழாவில் அகில இலங்கைக் காந்திய சேவா சங்கத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி, வைத்திய மேதை அப்பாவின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். பண்டிதர் க. சிவலிங்கம், திருவாளர்கள் நா. கந்தையா, கே. ஏ. செல்லையா, என். எஸ். இஸ்தாக்கி, புலவர் நா. சிவபாதசுந்தரனார், வைத்திய கலாநிதி திரு. கே. முருகேசபிள்ளை, கவிஞர் இ. நாகராஜன் ஆசிரியர் வி. முருகேசு, மயிலை சிவ. சண்முகசூரசன் ஆகியோரின் பாராட்டுகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



## ஜோதிஷமணி பட்டம் பெற்றார்

புலோலி, வெள்ளி கரவெட்டியைச் சேர்ந்த சோதிடரான மேல்கரவை காவ சிவப்பிரகாசனுக்கு 'ஜோதிஷமணி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது: கரவெட்டி வாணி கலைக்கழகம் கொண்டாடிய காந்தி நூற்றாண்டு விழாவில் இப் பட்டம் வழங்கப்பட்டது.

கீழைத்தேச சோதிடத் துறையிலும் மேலைத்தேச சோதிடமுறையிலான என் சாஸ்திரத்திலும் ஜோதிஷமணி நிபுணத்துவம் பெற்றவரென்றும் மாணவர்கல்வி நிலை உள்ளிட்டு ஒவ்வொரு மனிதரதும் காலபலன் சொல்வதில் அவருக்குநிகர் அவரே என்றும் ஜோதிஷமணிப் பட்டத்தை வழங்கிப் பேசுகையில் வாணி கலைக்கழக இயக்குநரான பண்டிதர் க. வீரகத்தி தெரிவித்தார்.

ஆசிரியர் திரு மகாலிங்கம், பண்டிதர் கணேசன் ஆகியோரும் ஜோதிஷமணியின் சோதிட ஆற்றலைப் பாராட்டிப் பேசினர். முடிவில் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு ஜோதிஷமணி நன்றி தெரிவித்துப் பேசினார்.

## கைமேல் பலன்

அராலி வெள்ளி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த தேசிய இளைஞர் அமைப்பு பற்றிய ஆசிரியத் தலையங்கத்தையடுத்து இப்பகுதியிலுள்ள இளைஞர் பலர் அவ்வமைப்பில் சேர்ந்து சேவைசெய்ய முன்வந்துள்ளனர்.

கிராம சேவகரிடமிருந்து சான்றிதழ்கள் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள அவர்கள்தங்கள் புகைப்படங்களை காரியாதிகாரி அலுவலகத்தில் கொடுத்து பாஸ் புத்தகங்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.


சோ நடித்த

**ஒளிவிளக்கு**

**மனோகரா**
யாழ்ப்பாணம்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா போயா 3 காட்சி
வொலிநாணயக்கார, நடித்த
**பிக்பொக்கட்**
(சிங்களம்)

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Richard Johnson,
Daliah Lavi
in
SOME GIRLS DO
(a ults)

நடிகர் திலகம்
★ **சிவாஜிகணேசன்**
நாட்டியப்பேரொளி
★ **பத்மினி**
மற்றும் பலர் நடித்து
ஏ பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்

# தில்லானா மோகனம்பாள்

# 10,000 மசி-பேர்குசன் உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாது.



10,000 மசி – பேர்குசன், நாட்டின் ட்ராக்டர்கள் தொகையில் 75% மானவை.

10,000 மசி – பேர்குசன் ட்ராக்டர்கள், பல கோடி ரூபாய் பெறுமதியான பதில் உறுப்புக்கள், துணைகொண்டவை.

10,000 மசி – போகுசன் உரிமையாளரே இத் ட்ராக்டரின் வேளாண்மைப் பாவனைச் சிறப்புக்கு அத்தாட்சி.

10,000 மசி – பேர்குசன். நாடெங்கிலும் இருபத்து மூன்று நிலையங்களில் சேவை வசதி கொண்டுள்ளன.

முதலாவதாக விற்கப்பட்ட மசி – பேர்குசன் இன்றும் பாவனையில் உள்ளது. எனவே . . . 10,000 மசி – பேர்குசன் உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாதே !

MF BG

பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டெட்
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.
டெலிபோன் 93097.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பியாப்ரா வீழ்ச்சி

# சரணாகதி உடன்படிக்கை கைச்சாத்தானது

## நிவாரண வேலைகள் முமுரமாக ஆரம்பம்

லேகோஸ், ஜன 16

பியாப்ரா இராணுவத் தளபதி லேகோஸில் தமது படைகள் சரணடைவதற்கான உடன்பாட்டில் கைச்சாத்திட்டதுடன் பியாப்ரா தனி ராஜ்யம் என்ற அந்தஸ்தை முற்றாகவே இழந்தது.

பியாப்ரா அன்று தனியாக ராஜ்யம் எதுவும் நடைமுறையில் இல்லை என்று பியாப்ரா படைகளின் புதிய தளபதியாக விருந்தவர் அறிவித்திருக்கிறார்.

பியாப்ரா நிபந்தனையின்றி சரணாகதியடைந்துவிட்டபோதிலும் ராணுவ சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்துவரும் என்று ஜெனரல் கோவான் அறிவித்திருக்கிறார். அமைதியும் ஒழுங்கும் ஏற்படுத்துவதற்கு இது அவசியமாகின்றது என்று அதிபர் கோவான் அறிவித்திருக்கிறார்.

நைஜீரியாவில் மீண்டும் அமைதியும் ஒழுங்கும், ஒருமைப்பாடும் ஏற்பட உழைக்கும்படி ஜெனரல் கோவான் மக்களை வானொலிமூலம் விடுத்த ஒருசெய்தியில் கேட்டுக்கொண்டார். பிரிந்துபோன பியாப்ராவின் ஆட்சிக்கு காரணமாய் இருந்த அனைவருக்கும் பொது மன்னிப்பு ஒன்றை அவர் ஏற்கனவே அறிவித்திருக்கின்றார். தலைமறைவாக இருந்துவரும் சிவில் சேவையாளர்கள் அனைவரும் வெளிவந்துடன் அவர்களுக்கு பியாப்ராவில் மீண்டும் அவர்கள் வகித்த பதவிகளில் அமர்த்தப்படுவார்கள் என்று ஜெனரல் கோவான் அறிவித்திருக்கின்றார்.

பியாப்ராவில் பிரமாண்டமான அளவில் நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தகவல் வெளியிட்டார். பாதிக்கப்பட்டுள்ள பியாப்ரா மக்களில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் முதலிடம் கொடுக்கப்படுவதாகவும் அறிவித்திருக்கிறார்.

### ஒஜுக்கு செய்தி

பியாப்ராவின் அதிபராக விளங்கிய கேணல் ஒஜுக்கு இப்பொழுது எங்கிருக்கிறார் என்பது இன்னும் தெரியவில்லை. ஆனால் அவர் விடுத்துள்ள ஒரு செய்தி ஜெனிவாவில் வெளியிடப்பட்டுள்ளது.

பியாப்ராவில் பசிபட்டினியால் வாடும் மக்களுக்கு உடனடியாக உதவிகள் புரியும்படி அவர் உலகநாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இன்னும் மூன்று தினங்களுக்கும் பியாப்ரா மக்களுக்கு உணவு மருந்து உதவிகள் கிடைக்காவிட்டால் பெருமளவில் கஷ்டங்கள் சம்பவிக்கும் அபாயம் ஏற்பட்டுவிடும் என்று அவர் அச்சம் தெரிவித்திருக்கிறார்.

## பிரி. எம்: பி. மீது ராஜத் துரோக குற்றச்சாட்டு

லண்டன், ஜன. 16

வெளிநாடு ஒன்றுக்காக உளவு வேலைகளில் ஈடுபட்டாரென்ற குற்றச்சாட்டின்மீது பிரிட்டிஷ் எம். பி. ஒருவர் விசாரிக்கப்படுகிறார்.

வில்லியம் எலன் என்ற இவர் 15 ஆண்டுகளாக எம். பி. யாக இருந்து வந்துள்ளார்.

ராஜத்துரோகக் குற்றச்சாட்டின்மீது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள இந்த நபர் எந்த நாட்டுக்காக உளவுபார்த்தார் என்று வெளியிடப்படவில்லை. ஆனால் ரஷ்யாவுக்காக அல்லவென்று தெரியவருவதாகக் கூறப்படுகின்றது.

## வடமாகாண திரைகளில் குடும்பத் திட்டம்

கொழும்பு, வெள்ளி

சர்வதேச திரைப்பட நிபுணரான வால்டிஸ்னி தயாரித்த குடும்பத்திட்டம் சம்பந்தமான கார்டூன் திரைப்படம் வடமாகாணமெங்கும் காட்டப்பட விருக்கிறது

## வாடகைக்கார் தொழிலாளர் சங்கம் அமைத்தனர்

### "வேற்றுமைக்கு இடம் கொடாதீர்" — கோப்பாய் எம். பி.

யாழ்ப்பாணம், சனி

"வாடகைக்கார் தொழிலாளர், ஜாதி, மதம், ஊர் போன்ற வேற்றுமைகளுக்கு இடம்கொடாது, சகலரின் நலத்தையும்சமமாகக்கருதி, ஒன்றுபட்டு, ஒரு சங்கத்தின் கீழ் இயங்குவதைத் தொடர்ந்தே, அவர்கள், சகலவிஷயங்களிலும், உயர்வும், வெற்றியும் பெறமுடியும்!"

இவ்வாறு. வாடகைக்கார் தொழிலாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய, கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை கூறினார். யாழ்ப்பாணம் இ. போ. ச. பஸ் தொழிலாளர் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில திரு கதிரவேற்பிள்ளை எம். பி. தொடர்ந்து கூறியதாவது:

"இந்த வாடகைக்கார் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர் அனைவரும் சங்கவிஷயங்கள் அனைத்திலும் உரிமையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும், ஒத்துழைப்பதைத் தொடர்ந்தே, இச்சங்கம் உயர்வுடனும், வெற்றியுடனும் விளங்கமுடியும்.

வாடகைக்கார் தொழிலாளர்கள் பொதுநலத்தையும் ஏனைய சகலவிஷயங்களையும் சேர்ந்துசிந்தித்து, ஒற்றுமையாக ஒரு சங்கம் அமைத்து, அதன் கீழ் இயங்க முற்பட்டது, அவர்கள் சுபீட்சத்திற்கும், வெற்றிக்கும் அமைக்கப்பட்ட படியாகும்."

அட்வக்கேட் திரு. எம். ஆலாலசுந்தரம் பேசுகையில் "தொழிலாளர் எவரும் அவர்களின் நலன்களைப்பாதுகாத்துக்கொள்ள இப்படியாக ஒரு சங்கம் அமைத்து இயங்கவேண்டியது அவசியம்" என்றார்.

அடுத்து, வாடகைக்கார் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைவராகவும், திரு. ரி. இராஜகிளி உபதலைவராகவும், திரு. ஆர். கந்தையா செயலாளராகவும், திரு. எஸ். பி. கனகரத்தினம் உபசெயலாளராகவும், திரு, ரி. ஜீவரத்தினம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 6 பேர் கொண்ட ஒருசெயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (மட்டு. நி.)

## 'நகர முன்னேற்றத்தில் பாகுபாடின்றி சேவை செய்வேன்'

### புதிய ந. ச. தலைவருக்கு பாராட்டு

வல்வெட்டித்துறை, வெள்ளி

இந் நகரசபையின் சகல வட்டாரங்களுக்கும் எதுவித வேறுபாடுமின்றி சேவை செய்வதே எனது நோக்கம். நகரத்தின் ஆக்கபூர்வமான பணிகளை நிறைவேற்றுவத[illegible] உடனடியான கவனத்தைச் செலுத்துவேன். அங்கத்தவர் பொதுமக்கள் அனைவரும் என்[illegible] உழைத்து நகரின் முன்னேற்றத்துக்கு பாடுபடவேண்டு[illegible] பணிவாகவேண்டுகின்

கொண்டு பேசுகையில்கூறியதாவது: இன்று பருத்தித்துறை நகரசபையில் கூடுதலான வேலைகள் காத்துக்கிடக்கின்றன. இதுவரை காலமும் நகரசபையின் முன்னேற்றத்துக்காக பருத்தித்துறை பாராளுமன்ற [illegible]பினர் என்ற முறையில் எது வித உதவியையும் செய்து கொடுக்க [illegible]யாத நிலையில் [illegible] சென்று கொண்டிருந்தது. இனிமேல் நகரமக்களின் முன்னே[illegible]

## "ஆயிரம் விழா எடுத்தாலும் பொங்கலுக்கீடுபொங்கலே"

### சாவகச்சேரி எம். பி. கூறுகிறார்

மட்டுவில், வெள்ளி

"தமிழர்களின் மத்தியிலே ஆயிரமாயிரம் விழாக்கள் கொண்டாடப்பட்டு வருவது வழக்கமாகவிருந்தபோதிலும் உழைப்புக்கும், தொழிலுக்கும் முதலிடம் கொடுத்து இல்லங்கள் தோறும் பால் பொங்க ஆதவனுக்கு உழவர் குலம் விழாவெடுக்கும் இந்தப் பொங்கல் விழாவே அவன் சரித்திரத்திலேயே முதலிடம் பெறுகிறது."

இவ்வாறு நுணாவிலில் நடைபெற்ற பொங்கல்விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் தமது தலைமையுரையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

"தமிழன் மத்தியிலே சரித்திரத்திற்கு முற்பட்ட காலம் தொட்டே இப் பொங்கல்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அன்று அவன் இயற்கையின் உதவியோடு தன் பரம்பரைச் சொத்தான மாடுகளையும் உதவிக்குக் கொண்டு தன் நாட்டின் தானியவளத்தைப் பெருக்கினான். எனவே இயற்கைக்குப் பொங்கலிட்டு தன் நன்றிக்கடனை செலுத்தியதுடன் மாடுகளுக்கும் நன்றிக்கடன் செய்வது வழக்கம்.

இன்று நமது மத்தியிலே விஞ்ஞானப் புதுமைகள் மலிந்துள்ளன. எனவே விஞ்ஞானத்தின் உதவியுடன் பல புதுமைகளைப் புகுத்தி விவசாயத்தைப் பெருக்குவதன் மூலமே நாம் தன்மானமும், சுயநம்பிக்கையும், உழைப்பின் உயர்ச்சியையும் பெற்ற ஒரு சிறந்த சமுதாயமாக வாழ முடிடியும்.

இன்று உங்கள் இல்லங்கள் தோறும் இன்பம் பொங்கும் இந்த வேளையிலே எமது இனம், எமது மொழி, கலை, கலாசார உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும் என்ற ஆசையும் பொங்கும். அது இயல்பு.

தமிழ் ஆட்சிபீடம் ஏற வேண்டும், தமிழன் சலுகைகளைத் துச்சமாக மதித்து உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழவேண்டும் என்ற உங்கள் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவே இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அங்கத்தவர்களை ஏகோபித்து ஆட்சிமன்றத்திற்கு அனுப்பி வைத்தீர்கள்.

உங்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதையே இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. எனவே அன்று முதல் தமிழினத்தின் உரிமைக்காக பல புனித போராட்ட இயசகங்கள் மூலம் இன்று வரை போராடி வருகிறது.

எமது கட்சி அன்று நடத்திய சாத்மீகப் போராட்டங்களான சத்தியாக்கிரகம் போன்றவைகளினாலேயே தனிச்சிங்களச்சட்டத்தை எதிர்த்தது. இதன் காரணமாகவே வட கிழக்கு மாகாணங்களில் தமிழுக்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளது.

எமது நாட்டின், எமது மொழியின், கலை, கலாச்சாரங்களின் உயர்விற்காக எம்முடன் ஒத்துழைக்க வேண்டியது எமது வருங்காலத் தலைவர்களான இளைஞர்களின் பாரிய கடமையாகும்.

## பௌத்தர் கூட்டத்தை

## "மறைந்துகிடக்கும் ஏடுகளை அச்சாக்கி உதவவும்"

### 'இராச வைத்தியர்' பாராட்டுவிழாவில் யாழ். உதவி அரசாங்க அதிபர்

சித்தன்கேணி, வெள்ளி

"தமிழ் மன்னர்கள் காலத்தில் நான்கு வைத்தியத்துறைகளும் புகழுடன் சிறந்து விளங்கின. அந்நிய ஆட்சியின்போது அவற்றின் மாண்பு குன்றியது. நாடு சுதந்திரமடைந்த பின்னர் வைத்தியத்துறை மீண்டும் புதுப் பொலிவுடன் விளங்கியது. சித்த வைத்தியம், தமிழர்களுக்கே உரித்தான ஒன்று. சித்த வைத்தியத் துறையில் பல ஏடுகள், பொக்கிஷங்கள் இலங்கை அடங்கிலும் மறைந்துகிடக்கின்றன. அவற்றை மீண்டும் ஒருங்கு சேர்த்து, அச்சிட்டு, எதிர்காலச் சந்ததியினர் அறிந்துகொள்ளவும், பேணிக் காப்பாற்றவும் வெளியிட்டு உதவும்படி 'இராச வைத்தியர்' திரு. அ. க. குமாராமி அவர்களை பகிரங்கமாகவும், பணிவுடனும் வேண்டுகிறேன்."

இவ்வாறு வட்டுக்கோட்டை வைத்தியாச்சாரி திரு. அ. க. குமாரசாமி, இலங்கை அரசினரால் 'இராச வைத்தியர்' என்னும் வரிசை நல்கிச்

தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:

"சித்த வைத்திய மேதைகள் நால்வரை, 'இராச வைத்தியர்'களாக இலங்கை அரசாங்கம் கௌரவித்தமை சித்த வைத்தியத்தின் மாண்பை எடுத்துக்காட்டுவதாகும். இந்த, நால்வரில் திரு. அ. க. குமாரசாமி, 'இராச வைத்திய'ராகக் கௌரவிக்கப்பட்டமை யாழ்ப்பாணத்துக்கு, தமிழ் மக்களுக்குப் பெருமையளிப்பதாகும். சித்த வைத்தியத் துறை, தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கே உரிய பாரம்பரியச் செல்வமாகும். இலங்கை வைத்தியச் சபையில் 18 ஆண்டுகள் தலைவராகப் பதவி வகித்தவர், 'இராச வைத்தியர்'. கொழும்பு ஆயுள்வேத வைத்தியச் சபையின் ஆலோசகரான திரு. அ. க. குமாரசாமி, ஈழநாடு முழுதும் மறைந்து கிடக்கும் சித்த வைத்தியப் பொக்கிஷங்களை ஏனைய வைத்திய நிபுணர்களுடன் சேர்ந்து பொதுமக்களின் நன்மைக்காகவும், சித்த வைத்தியத்தின் மறுமலர்ச்

## இந்த நாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர் தலைமறைவாக இருந்து வரும் சிவில் சேவையாளர்கள் அனைவரும் வெளிவந்த

அச்சம் தெரிவித்திருக்கிறார்.

# இந்த நாடுகளின் உதவி வேண்டாம்

பிரான்ஸ், போர்த்துகல், தென்னாபிரிக்கா ரொடீஷியா ஆகிய நாடுகளிலிருந்து நிவாரண உதவிகள் எதுவும் தேவையில்லையென்று நைஜீரிய அரசு மறுத்துவிட்டது.

உதவிசெய்வதற்கென பிரிந்துபோன ராஜ்யத்துக்கு இதுவரை நேரடியாக போக்குவரத்து மேற்கொண்ட நபர்களையும் விரும்பத்தகாதவர்கள் என்று நைஜீரிய அரசு அறிவித்திருக்கின்றது. பியாப்ராவில் நிவாரணவேலைகளில் முன்னர் ஈடுபட்டிருந்த பல மத ஸ்தாபனங்களும், சங்கங்களும் கூட தடைவிதிக்கப்பட்டுள்ளன.

## 'பாப்பாண்டவரைக் குற்றஞ்சாட்டுகிறார்கள்

பாப்பாண்டவரையும் பிரஞ்சு அரசையும் அமெரிக்காவிலுள்ள நைஜீரிய தூதுவர் குற்றஞ்சாட்டியுள்ளார். நைஜீரியாவில் மாமூல் நிலைமை ஏற்படுவதை இவர்கள் தடுத்துவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிருபர் கூட்டமொன்றில் பேசிய தூதுவர் திரு எட்வின் ஓஜபே ஒக்பு பியாப்ரா பிரிவினையாளர்களை முன்னர் ஆதரித்தவர்கள் இப்பொழுது அங்கு அமைதியேற்படுவதையும் தடை செய்கிறார்கள் என்றார். பெயர்களைக்குறிப்பிடும்படி நிருபர்கள் கேட்டபோது பாப்பரசரையும் பிரான்சையும் அவர் குறிப்பிட்டார்.

வகுப்பறையில் ஆபாசம்

# இரு ஆசிரியர்கள் மீது நடவடிக்கை

லோங்பீச் (கலிபோர்னியா) ஜன. 16

சமூகவியல்பாடம் கற்பிப்பதற்காக வகுப்பறையில் உடைகளை களைந்த நிலையில் ஆட்களை வைத்து விளக்கம் கொடுத்ததற்காக இங்குள்ள கல்லூரியொன்றில் இரு பேராசிரியர்கள் வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டனர்.

இதனை ஆட்சேபித்து உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்த நான்கு மாணவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

கல்லூரியின் நிர்வாகப் பகுதியிலிருந்து இந்தமாணவர்கள் வெளியேற மறுத்தனர். இதில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கட்டிடம் மூடப்பட்ட பின்னர் வகுப்பறையில் இருப்பது சட்டவிரோதம் என்று அறிவித்த பின்னர் 200 மாணவர்கள் வரை வெளியேறினர்கள். நான்கு பேர் மட்டும் உள்ளே இருந்தனர்.

இரு இளம் பெண்களையும் ஓர் ஆணையும் வகுப்பறையில் நிர்வாணமாக நிறுத்தி அதே சமயம் உடல்உறவுகளை விளக்கும் சினிமாப் படங்களையும் இந்தப் பேராசிரியர்கள் காட்டினார்களாம்.

உதவிப் பேராசிரியர்களான டென்ரெபேர்ட்சன் மேரியான்ஸ்டீல் ஆகிய இவ்விருவரும் உடல் சம்பந்தமான உறவுகள் அல்லது உடலில் உள்ள பாகங்கள் கேவலமானவை என்பதில் உள்ள முட்டாள் தனத்தை தாங்கள் மாணவர்களுக்கு விளக்க முயன்றதாக இருவரும் கூறியிருக்கின்றனர். 30 நாட்களுக்கு வகுப்புகளுக்கு வரவேண்டாம் என்று இருவருக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலியக் கப்பல்

பிரஸ்ஸல்ஸ், ஜன. 16

பிரெஞ்சு, அமெரிக்க ஆயுதங்களுடன் இஸ்ரேலிய கப்பல் ஒன்று பெல்ஜியத் துறைமுகத்தின் வழியாகச் சென்றதாக பெல்ஜியம் அரசு ஊர்ஜிதம் செய்திருக்கின்றது.

கொழும்பு, வெள்ளி

சர்வதேச திரைப்பட நிபுணரான வால்டிஸ்னி தயாரித்த குடும்பத்திட்டம் சம்பந்தமான கார்டூன் திரைப்படம் வடமாகாணமெங்கும் காட்டப்படவிருக்கிறது

சின்னஞ்சிறு குடும்பத்தின் சந்தோஷத்திலிருந்து பாரிய தேசங்களின் பொருளாதார சுபிட்சம்வரை குடும்பத் திட்டத்தின் பலாபலன்களை விளக்கும் இந்த 35 மிலிமீட்டர்வர்ணத் திரைப்படத்தின் தமிழ்ப் பிரதி இம்மாதம் 8-ம் திகதியன்று யாழ்ப்பாணம் றீகல் தியேட்டரில் முதல் முறையாகத் திரையிடப்பட்டது. தணிக்கைசபையின் பூரண அங்கீகாரத்தைப் பெற்ற இந்த தமிழ் கார்ட்டுன் படம், விரைவில் வடமாகாணம் பூராவும் உள்ள பிரபலமான தியேட்டர்களில் திரையிடப்படும்.

இதன் சிங்களப் பிரதியும் விரைவில் தயாராகி கொழும்பிலும் தென்னிலங்கையிலும் திரையிடப்படும்.

ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா லத்தீன் அமெரிக்கா உட்பட 96 நாடுகளில் இந்த டிஸ்னியின் வர்ண கார்ட்டூன் திரைப்படம் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,

## ஐ. இ. மு, கழக நிர்வாகிகள்

அல்லைப்பிட்டி, வெள்ளி

தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் பொங்கல் பண்டிகையன்று நடாத்தப்பட்ட வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் டாக்டர் கே, வீ. கே. ஜெயச்சந்திரா, உபதலைவர் செ. சோதிராசா. செயலாளர் க. இராசாசி, துணைச்செயலாளர் எம். ஜீவா, தனாதிகாரி எஸ். கே. பாலசுந்தரம், கணக்குப்பரிசோதகர் பி. சண்முகரெத்தினம் அறுவர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிசெய்யப்பட்டது.

## ஒருநாள் சம்பளத்தை கொடுத்தனர்

மஸ்கொலியா, வெள்ளி

அட்டன் இ.போ.ச.டிப்போவைச் சேர்ந்த 400 ஊழியர்கள் வெள்ள அகதிகளுக்கு அரசாங்கம் உதவி செய்வதற்காகத் தங்கள் ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்துள்ளனர்.

த... உடனடியான கவனத்தைச் செலுத்துவேன். அங்கத்தவர் பொதுமக்கள் அனைவரும் என்னோடு ஒத்துழைத்து நகரின் முன்னேற்றத்துக்கு பாடுபடவேண்டுமெ... பணிவாகவேண்டுகின்றேன்.

பருத்தித்துறை நகரசபையின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. வி. தர்மலிங்கத்திற்கும் உபதலைவர் அவரது ஆதரவாளருக்கும் பொதுமக்களால் அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்புக் கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசும்போது திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வழக்கறிஞர் எம். வேலும்மயிலும் தலைமைவகித்தார்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே துரைரத்தினம் இக்கூட்டத்தில் கலந்து ... பாராளுமன்ற ...ப்பினர் என்ற முறையில் ...துவித உதவியையும் செய்து கொடுக்க முடியாதநிலையில் கடந்தகாலசபை சென்று கொண்டிருந்தது. இனிமேல் நகரமக்களின் முன்னே...த்திற்கு தலைவரின் ஒத்துழைப்போடு நகரை முன்னேற்றப் பாதையில் செலுத்திச் செல்வோம் என்று கூறினார். இப்போது இருந்துவரும் நகரசபையின் வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாட்டை நீக்க அமைச்சருடன் கலந்து பேசி விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

புதிய சபையின் உப தலைவர் திரு. கே. சேனாதிராசா ஜே. பி. உறுப்பினர்களான எஸ். விவேகானந்தராசா, எஸ் முருகேசு, வி கமலநாதன், வர்த்தகப் பிரமுகர் திரு. பி. வீரவாகு ஆகியோரும் நன்றிதெரிவித்துப்பேசினர்.

## "எந்தமதத்தின் புனிதத்தையும் குடும்பத்திட்டம் பாதிக்காது"

— டாக்டர் பொட்ஸ்

கொழும்பு, வெள்ளி

"அடிக்கடி ஏற்படும் பிரசவங்களால் மரணமடையும் பெண்களின் தொகையைவிட, கருத்தடை மாத்திரைகளை அருந்துவதால் பாதிக்கப்படுவதாகக் கூறப்படும் பெண்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகும். அதோடு புகைபிடிப்பதாலும், மது அருந்துவதாலும் வீதி விபத்துக்களாலும் நாளாந்தம் மரணமடையும் மக்களின் எண்ணிக்கையும், கருத்தடை மாத்திரைகளினால் பாதிக்கப்படும் மக்களின் தொகையைவிட 20 லிருந்து 30 மடங்கு அதிகமாகும்"

இவ்வாறு சர்வதேச திட்டமிட்ட பெற்றோர்சம்மேளன வைத்திய பணிப்பாளர் டாக்டர் மல்கம் பொட்ஸ் கொழும்பிலும் கண்டியிலும் நிகழ்த்திய பல்வேறு சொற்பொழிவுகளின்போது கூறினார். மூன்று தினங்கள் இலங்கையில் தங்கிஇருந்த டாக்டர் பொட்ஸ், பாகிஸ்தான், நேபாளம், ஆப்கனிஸ்தான் துருக்கி ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியத்துறை மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மத்தியில், கருத்தடை பற்றிய தப்பபிப்பிராயங்கள் சம்பந்தமாக டாக்டர் பொட்ஸ் உரைநிகழ்த்தினார்.

மல்வத்தை பிக்கு மகா பீடத்தின் அதிபதி வண. மடுகெல்ல ஸ்ரீ சுமன சித்தார்த்த தம்மசித்தி மகா நாயக்கா தேரோவையும் டாக்டர் பொட்ஸ் சந்தித்து அவரது ஆசியைப்பெற்றார்.

எந்த ஒரு மதத்தினதும் புனிதத்தைப் பாதிப்பது குடும்பத் திட்டத்தின் நோக்கம்அல்ல என்றும், ஒவ்வொரு தனி மனிதனும் சந்தோஷமான குடும்பத்தை உருவாக்கப் பயன்படுவது தான் குடும்பத்திட்டம் என்பதையும் டாக்டர் பொட்ஸ் மகாநாயக்கா தேரோவுக்கு விளக்கிக் கூறினார்.

இதையடுத்து சர்வதேச குடும்பத்திட்ட சம்மேளனத்தின் நடவடிக்கைகள் சிறப்புற மகாநாயக்கா தேரோ வாழ்த்தினார்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. நெவில் ஜயவீராவையும்மற்றும்வைத்தியத்துறை அதிகாரிகளையும் டாக்டர் பொட்ஸ் சந்தித்தார்.

## இவர்களுக்கு வேலையில்லையாம்

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு உப-தபால் கந்தோரில் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லையென புகார் கூறப்படுகிறது. நிரந்தர ஊழியர்களே லீவில்செல்லும் ஊழியர்களின் வேலையை மாற்று முறைத் திட்டத்தில் செய்கின்றனராம் இதனால் இங்கு பதிவு செய்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் வாலிபர்கள் அவஸ்தைக்குள்ளாகின்றனர்

மொழி, கலை, கலாசார உரிமைகளைப் பெற்று வாழ

## பௌத்தர் கூட்டத்தை கலைத்தனர்

சைகோன், ஜன: 16

பௌத்தமாணவர்கள்கூட்டம் நடந்திக்கொண்டிருந்த பகோடாவொன்றிற்குள் பொலிசார் புகுந்து கூட்டத்தைக் கலைத்தனர்.

சைகோனுக்கு அருகிலுள்ள சிறு கிராமமொன்றில் இந்தச்சம்பவம் இடம் பெற்றது.

## வங்கியின் புதிய சட்டம்

கோட்டை, வெள்ளி

அரசாங்க கடன் வழங்கும் வங்கியின் அதிபர்கள் சபை கடன் பெறுபவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் தாங்கள் செலுத்தவேண்டியதவணைப் பணத்தையும் அதன் வட்டியையும் செலுத்த வேண்டுமெனவும் அவ்வாறு செலுத்தத்தவறினால் தவறியவர் தனது முதலில் எஞ்சியுள்ள பணத்துக்கு ஒருவீத வட்டியைக்குற்றப் பணமாகச் செலுத்த வேண்டுமெனவும் புதியதொரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளனர்.

இந்த நிதி வருடத்துக்கும் திரு என். பி. டி. எஸ். விஜேசேகராவையே திரும்பவும் மேற்படி வங்கியின் அதிபர்கள் சபை அதிபராக நிதி அமைச்சர் நியமித்துள்ளார்.

## பொங்கல் விழா

மட்டுவில், வெள்ளி

வலி-கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மின்நெசவு நிலையத்தில் நேற்று பிரமாண்டமான தைப் பொங்கல் விழா நடைபெற்றது. உழைப்பிற்கும் தொழிலுக்கும் உயர்வு கொடுக்கும் இந்த விழாவை மேற்படி நெசவாலை அதிகாரிகளும் தொழிலாளரும் ஒன்று சேர்ந்து சிறப்பாகக் கொண்டாடினர்.

பொங்கல் விழா முடிவடைந்ததும் பகல் சுமார் 12 மணியளவில் தெய்வ வழிபாடு செய்து மங்கல விளக்கேற்றி நல்ல நாளில் வேலை ஆரம்பித்து வைத்த பின் மங்கலப்பொங்கலின் புதிதுண்டு சுவைத்தனர்.

0 0 0

வேலணை, வெள்ளி

வேலணை கலைமகள் சன சமூக நிலையத்தில் நிலையத் தலைவர் திரு. ப. அரசரத்தினம் தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது

இவ்வாறு வட்டுக்கோட்டை வைத்தியாச்சாரி திரு. அ. க. குமாரசாமி, இலங்கை அரசினரால் 'இராச வைத்தியர்' என்னும் வரிசை நல்கிச் சிறப்பிக்கப்பெற்றமை குறித்து வட்டூர் மக்களால் எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில், 'இராச வைத்தியருக்கு'ப் பொன்னாடை போர்த்திப் பேசிய யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை கூறினார்.

வட்டுக்கோட்டைச் சிவன் கோவில் மேலைவீதியில் அமைந்துள்ள வைத்திய மேதை 'அப்பா அரங்கில்' நடைபெற்ற இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. த முருகேசம்பிள்ளை ...ழ்நாடு முழுதும் மறைந்து கிடக்கும் சித்த வைத்தியப் பொக்கிஷங்களை ஏனைய வைத்திய நிபுணர்களுடன் சேர்ந்து பொதுமக்களின் நன்மைக்காகவும், சித்த வைத்தியத்தின் மறுமலர்ச்சிக்காகவும் அச்சிட்டு வெளியிட்டு உதவவேண்டும்."

வலி-மேற்குக் காரியாதிகாரி திரு. மாணிக்க நடராசா மங்கல விளக்கேற்றி வைத்து, வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் திரு. ச. நிற்சிங்கம் கொடியேற்றி ஆரம்பித்துவைத்த இவ்விழாவில் பாராட்டு விழா மலரை வெளியிட்டுவைத்த வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில்

(2-ம் பக்கம்பார்க்க)

# இன்றையபலன்

தை மாதம் 4-ம் திகதி 17-1-70]

சோதிடக்கலாநிதி திருமலை க, வேலுப்பிள்ளை

**மேஷம்**- துன்பத்தின் சாயல் மனதிலே படியும், புனைந்துரைகளால் மனது புண்படும். சிலர் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்வார்கள்

**ரிஷபம்**- சிறிய விடயத்திற்கு கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குறுக்குவழித்தலையீடும் இடம் பெறும் பொறுமையைப் பேணவும்.

**மிதுனம்**- திடீர்வரவுகளுக்கும் இடம் உண்டு. வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சுவன்மையின் மூலம் பெரிய இடத்து ஆதரவைத் தேடிக்கொள்ளுவீர்கள். குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகளும் உண்டு.

**கடகம்**- வாழ்க்கை புதிராகத் தோன்றும். ஆசாரக் குறைவுக்கும் இடம்உண்டு. சகோதரி ஒருவரின் பிரச்னை மனதிற்கு வேதனையைத் தரும். உள்வீட்டிலே உபத்திரவங்கள் உருவாகும். அமைதிவேண்டும்.

**சிம்மம்**- பாதையில் பழுதுண்டு. பகைவர்கள் காத்திருப்பர் செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலருக்கு உடல்நலன் பாதிக்கப்படலாம். உணவுவிஷயத்தில் கவனம் வேண்டும்.

**கன்னி**- இதயத்தில் அமைதி குன்றும். குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றிமறையும். குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். உணவு விஷயத்தில் கவனம்வேண்டும்.

**துலாம்**- தூரதேசவாசம் உங்களை துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராதவிபத்துக்கும் இடம் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம்வேண்டும்.

**விருச்சிகம்**- குடும்ப வாழ்க்கை இன்று சுமுகமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார். டாக்டர்களுக்கு சிறப்பானதினம். பயன் உள்ளதொடர்புகள் பெருகும்.

**தனுசு**- பிரயாணத்தில் பொருள்நழுவக்கூடும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். நம்பிக்கை வைப்பதன் மூலம் பணம் பறிபோகலாம். புதிய தொழில்களை இன்று பின்போடவும்.

**மகரம்**- வாழ்க்கை இன்று மல்லிகைத் தோட்டம் போல் மணம் பரப்பிக்கொண்டிருக்கும் காதல் சிட்டுகளுககு இன்று கவர்ச்சிகரமான தினம். பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்.

**கும்பம்**- எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும். கொடுக்கல்வாங்கல்களினால் பிணக்குகள் ஏற்படும். நண்பர்களை பகைத்துக்கொள்வீர்கள். வீணான சிந்தனைகளுக்கு இடம்அளியாது இருக்கவும்.

**மீனம்**- உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்திஉண்டு. தாய்வழி பொருள் வரவுக்கும் இடம் உண்டு. உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் மனிதனுக்குப் பகுத்தறிவைத் தந்திருக்கிறார். நியாய அநியாயத்தையுணரும் ஆற்றலைத் தந்திருக்கிறார். எனவேமற்றவர்களைத் தின்று ஏப்பம் விடுவதோ மற்றவர்களை ஏமாற்றி ஏழைகளாக்கித் தாங்கள் பணக்காரர்கள் ஆவதோ தகாது.

— மகாத்மா காந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna Telephone: 889

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 4-ந் திகதி (17-1-70)

## ஆசியப்பிரதேச ஒத்துழைப்பு

இந்துசமுத்திரப் பகுதியில் நெருக்கடியைத் தவிர்த்து சுமுகமான அரசியலுக்கும் அப்பகுதி மக்களின் பொருளாதாரவளர்ச்சிக்கும் உதவும் பொருட்டு இந்துசமுத்திரப்பகுதி அணு ஆயுத சூன்யப்பிரதேசமாக நிலவவேண்டுமென இலங்கையும் இந்தியாவும் ஒருமித்த கருத்துக்கொண்டிருக்கின்றன என்று இந்தியக் குடியரசுத் தலைவர் இலங்கைக்கு வருகைதந்து திரும்பியபின் பிரபல இந்தியத் தினசரியான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. ஆசியப் பாதுகாப்பு, ஆசியப் பொருளாதார ஒத்துழைப்பு, ஆசிய பொதுச் சந்தை இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பொருளாதார, வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது போன்ற இரு நாடுகளுக்கும் பொதுவான முக்கிய விஷயங்கள் குறித்து இலங்கை - இந்திய அதிகாரிகளுக்கிடையிலும் அமைச்சர்கள், தலைவர்கள் மட்டத்திலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன. இப் பேச்சுவார்த்தைகளில் இருதரப்பினருக்கிடையிலும் பல விஷயங்களிலும் கருத்தொற்றுமையைக் காணக்கூடியதாக இருந்ததாம். சில விஷயங்கள் இப்போதுள்ளநிலையில் உடனடியாகச் செயற்பட்டுப் பயன்தரமுடியாதென்றாலும் வருங்காலத்தில் நல்ல பயனைத் தரக்கூடியவை. எனவே இந்தியக் குடியரசு அதிபரின் இலங்கை வருகை வெறும் சம்பிரதாயமானதல்ல; பயனுள்ள வருகைதான்

இலங்கை சிறிய நாடாக இருப்பினும் அதன் சக்தி வேறெந்தப் பெரிய நாட்டுக்கும் குறைந்ததல்ல. உலக நாடுகள் எல்லாவற்றுடனும் பகையில்லாமல் நட்புறவுடன் வாழும் நாடு இலங்கைதான். இல்லையென்பது தெரிந்ததே. சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் எல்லைத் தகராறு ஏற்பட்டு, சண்டையாக மாறி, இன்னும் இரு நாடுகளுக்கிடையிலும் உறவு சீராகவில்லை. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பிரிவினைகாலத்திலிருந்து காஷ்மீர் பிரச்னை மற்றும் பிரச்னைகளால் பகைமை உணர்ச்சிவளர்ந்துள்ளதேயன்றிக் குறையவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் சீனா. இந்தியா, பாகிஸ்தான், பர்மா, சிங்கப்பூர், மலேசியா முதலிய சகல ஆசிய நாடுகளுடனும் வர்த்தக, பொருளாதார, ராஜீய உறவும் தொடர்பும் கொண்டிருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் எல்லைப்பிரச்னைகளுக்கிடமில்லாதிருப்பதும் இந்தியா மட்டுமே அதன் நெருங்கிய அயல்நாடாக இருப்பதும் இதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடும்,

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் எல்லைச் சண்டை மூண்டபோது அங்கு சண்டையை நிறுத்துவதில் இலங்கை பெரும் பங்கு கொண்டிருந்தது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம்.

எனவே ஆசிய நாடுகளுக்கிடையில் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதானாலும் ஆசிய பொதுச் சந்தையொன்றை உருவாக்குவதானாலும். உறவு சீராக இல்லாத ஆசிய நாடுகளை ஒரு பொதுக்கொள்கைத் திட்டத்தின் கீழ் ஒன்று சேர்ப்பதற்கு இலங்கைதான் உருப்படியாக எதையும்செய்யக்கூடியநிலையிலிருக்கிறது இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி சீனா, பாகிஸ்தான் மலேசியத் தலைவர்களுடனும் இலங்கைத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, இப்பகுதியில் அந்நிய வல்லரசுகளின் தலை

குன்றக்குடி அடிகளாருக்கு

# இலங்கையில் எப்பகுதியிலும் நஞ்சு கொடுக்கவில்லை

**அகில இலங்கை காந்தி சேவா சங்கக்கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்றபோது சங்கச்செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை குன்றக்குடி அடிகளாருக்கு நஞ்சுகொடுத்ததென்ற பத்திரிகைச் செய்திகள் விவகாரம் பற்றி ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். குன்றக்குடி அடிகளின் இலங்கை விஜயத்திலிருந்து அவர் நாடு திரும்பிய பின்னரும் அவரைச் சந்தித்துப்பேசியது வரை விபரமாக திரு. வேலாயுதபிள்ளை கூறியுள்ளார். அவரது அறிக்கை இங்கு பிரசுரமாகிறது.**

**— சி க வேலாயுதபிள்ளை —**

(பொதுச் செயலாளர், அ. இ. காந்திசேவாசங்கம் உருத்திரபுரம்)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்காந்திநூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலங்கையில் சுற்றுப்பிரயாணஞ் செய்தபோது பாலில் நஞ்சு கலந்து கொடுக்கப்பட்டதாக வெளிவந்த செய்தி முழுக்கமுழுக்கத் தவறானதாகும். தவத்திரு அடிகளார் இலங்கைக்கு வருகைதந்தது தொடக்கம் தாயகம்திரும்ப விமானத்தில் ஏறும் வரையும் நான் கூடவே இருந்தேன். இலங்கையில் எப்பாகத்திலாவது, யாராவது, எந்தச் சந்தர்ப்பத்திலாவது நஞ்சுகொடுக்க முயற்சிக்கவும் இல்லை; கொடுத்ததும் இல்லை. உணவு, பானம் எல்லாம் என்மூலமாக, எனது கண்காணிப்பிலேயே அடிகளாருக்குக் கொடுக்கப்பட்டன. தீண்டாமைஅனுட்டிக்கப்படும் கிராமத்திலும், தீண்டாமை அனுஷ்டிப்பவர்கள் இடத்திலும் உணவு, பானம் முதலிய உபசாரங்களை ஏற்பதில்லை என்ற உறுதிப்பாடு அடிகளாரால் அனுஷ்டிக்கப்பட்டது.

''பெயக்கண்டு நஞ்சுண்டமைவர்...'' என்னும் திருக்குறளை எளிதில் மக்கள் மத்தியில் விளங்கப்படுத்துவதற்காக இந்த இலங்கைச் சுற்றுப்பயணத்தில் பல இடங்களில் தவத்திரு அடிகளார் கற்பனைக்கதைகள் சொன்னார். அதில் ஒரு இடம் நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையக் கூட்டம். இங்கு தலைமை வகித்தவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிஅதிபர் திரு இ சபாலிங்கம் அவர்கள். இக்கூட்டத்தில் இலக்கியப் பேச்சுப்பேச வேண்டும் என அன்பர்கள் விரும்பியதன்பேரில் அடிகளார் திருக்குறளில் நுழைந்தார். அடிகளார் கூறிய கற்பனைக்கதையைக் கேட்டுச் சபையோர் அதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர் பல கூட்டங்களில் இக்கதையைக்கேட்ட நாமும் சிரித்து ரசித்தோம். கூட்ட முடிவில் அடிகளாருக்குப் பால் கொடுத்தார் கூட்ட அமைப்பாளர். ''இங்கு தீண்டாமை அனுஷ்டிக்கப் படுவதுண்டா?'' என அடிக

கூறினார்கள். உடனே அடிகளார் மகிழ்ச்சியோடு பாலைப் பருகிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

இந்தக் கூட்ட நிகழ்ச்சி பற்றித்தான் 'பாலில் நஞ்சு' என ஒரு தமிழ்த் தினசரியில் செய்திஒன்று வெளிவந்தது. இச்செய்தி சம்பந்தமாக உதவி அரசாங்க அதிபர் திரு செ சிவஞானம்தலைமையில் திருக்கோணமலையில் நடந்த கூட்டத்தில் தவத்திரு அடிகளார் பாலில்

நஞ்சு கலந்துகொடுக்கப்பட்டதாகவந்த செய்தியை ஆணித்தரமாக மறுத்துக் கூறியதுடன் தன்னைமையமாக வைத்துப்புனைந்த அக்கற்பனைக்கதையையும் தொடர்பான திருக்குறளையும் கூறி விளக்கினார் ஏற்கனவே பத்திரிகைச் செய்தியைப் பார்த்துக்கவலையடைந்த பலர் இதனையறிந்து மகிழ்ச்சி தெரிவித்தனர். இக்கூட்டச் செய்தியைச் சில பத்திரிகைகள் பிரசுரித்தன. சில பத்திரிகைகள் பிரசுரிக்கவில்லை. நல்லூர்க் கூட்ட நிகழ்ச்சியை வெளியிட்ட பத்திரிகை திருக்கோணமலையில் அடிகளார் மறுத்தவிபரத்தையும் பிரசுரித்திருக்கவில்லை. மேலும் தவத்திரு அடிகளாரை மட்டக்களப்பு, மலைநாடு, நோர்வூட் முதலிய இடங்களிலும் பத்திரிகை நிருபர்கள், நஞ்சு விஷயமாக விசாரித்து

வெளியிடவில்லை. கடைசியாகக்கொழும்பில் தவத்திரு அடிகளார் தங் இருந்த இடத்தில் 'நஞ்சுச்செய்தி' வெளியிட்ட பத்திரிகையின் நிருபர் அடிகளாரைச் சந்தித்து அவர்களுடைய விளக்கத்தையும் பெற்றுக்கொண்டார். ஆனால் அந்தவிளக்கம் பத்திரிகையில் வெளிவரவில்லை.

தமிழ்நாட்டிலும் இச்செய்தி பரபரப்பாக வெளியிடப்பட்டது. பின்பு தவத்திரு அடிகளார் தமிழ்நாட்டிற்குச்சென்றபோது அங்கும் அவரிடம் பத்திரிகை நிருபர்கள் சென்று செய்தி பெற்றனர். ஆனால் அவர் கொடுத்த செய்திக்கு மாறாக தாங்கள் முன்வெளியிட்ட செய்தியை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் மீண்டும் பரபரப்பாக அப்பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன.

இச்சம்பவங்கள் இலங்கை பத்திரிகைகளுக்கிடையில் மோதலை உண்டாக்கியது.

சமீபத்தில் நான் இந்தியா சென்றபோது இவ்விஷயமாகத் தவத்திரு அடிகளாருடன் தொடர்புகொண்டேன். தமிழ் நாட்டுப்பத்திரிகைகள் தாம் கூறியதாக வெளியிட்டசெய்தி பொய் என்றும் தமது 'தமிழகம்' பத்திரிகையில், ''இலங்கையில் பாலில் யாரும் நஞ்சு கலக்கவில்லை; அது தவறானது'' என வெளியிட்டிருப்பதாக

பேசி மூலம் தொடர்பு கொண்டபோது தங்களுக்கு முதலில்செய்தி கிடைத்த விததைக் கூறினார்கள்.

இந்த நஞ்சுச் செய்தி பற்றி இந்நாட்டுப் பத்திரிகைகளில் வெளி வந்த வாதப்பிரதிவாதங்கள் எல்லாம் தவத்திரு அடிகளாருக்குஅனுப்பப்பட்டன. ஆனால் அவற்றை அடிகளார் பார்க்கவுமில்லை வாசிக்கவுமில்லை என்பது தெரியவந்தது. காரணம் தமிழ் நாட்டில் அவருக்கிருக்கும் மின்னல் வேகச் சுற்றுப் பிரயாணங்களும்மலைபோல்குவிந்துள்ள வேலைகளுமே இச்சூழ்நிலையில், இந்தப் பத்திரிகைக்குவியல்களைப் படிப்பதற்கோ பார்ப்பதற்கோ அடிகளாருக்கு வேண்டிய ஓய்வு கிடைக்கவில்லையென்பதை அங்கு நேரில் சென்றபோது அறிந்தேன். அவரது காரியாலய உதவியாளரிடம் விசாரித்த போது இந்தத்தகவல் தெரிந்தது.

தவத்திரு அடிகளாரைக் கடைசியாக நேரில் சந்தித்தேன். அவர் கூறியதாவது:-

''இலங்கையிலேயே இவ்விஷயத்தை மறுத்துவிட்டு வந்து விட்டோம். பத்திரிகைப்போட்டி; செய்திப் போட்டி; இவற்றுக்கிடையே சிக்கிவிளையாடஎனக்கு நேரமில்லை. எமக்காக, உடன் இருந்தநீயே வேண்டிய விளக்கங்களைக் கொடுக்கலாம். எனக்கு இந்த வீண் வேலைகளைப்பற்றிக் கவனிக்கவோ. சிந்திக்கவோ நேரம் இல்லை'' எனக் கூறினார்கள்.

தமிழ் நாட்டிலும் அடிகளார் தமக்கு நஞ்சு கொடுத்ததாகக்கூறவில்லை.

எனவே தவத் திரு. அடிகளாருக்குப் பாலில் நஞ்சு கலந்து கொடுக்கமுயன்றார்கள். என்ற செய்திமுற்றும் தவறானது.

பத்திரிகா தர்மம் முறையாகப்பேணப்படாவிட்டால் எத்துணை விபரீதங்கள் நாட்டில் விளையும் என்பதை இச்சம்பவம்மூலமாகநாம்கண்டுகொண்டோம்உண்மையைக் காப்பாற்றுவதும், உண்மை

## செய்திச் சுருக்கம்

### அமைச்சர் யாழ்ப்பாண விஜயம்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இம்மாதம் 29-ந் திகதி இங்கு வருகிறார். சென்ற முறை இங்கு வந்தபோது பார்வையிடாத அபிவிருத்தி வேலைகளையும், முன்பார்வையிட்ட கிராமசபைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளையும், நேரில்சென்று பார்வையிடுவார்.

0 0 0

### முஸ்லிம் ஆசிரியர்கள் குறை

கடந்த வருடம் ஜனவரி முதல் கண்டி மாவட்டத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட 43 முஸ்லீம் ஆசிரியர்களில் பலர் இதுகால வரையும் இடமாற்றப் பிரயாணச் செலவு பெறமுடியாதிருக்கின்றனராம். இவ் விஷயமாக இவர்கள் முஸ்லீம் ஆசிரியர் சங்கத்திற்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

0 0 0

### புகையிரத ஊழியர் பிரச்னை

அண்மையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட புகையிரத ஊழியர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்த விசாரணைக் குழு நேற்று தனது அறிக்கையைச்சமர்ப்பித்துள்ளது. பிரதமரினால் நியமிக்கப்பட் இக் குழுவின் சிபாரிசுகள் தங்களுக்குச் சாதகமாக இல்லாவிடில் கோரிக்கைகளைப் பெறுவதற்கு மீண்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக புகையிரதப் பாதுகாவலர் சங்கம் நேற்றுக்கூடி முடிவு செய்துள்ளது.

0 0 0

### தமிழ்ப்பல்கலைக் கழகம்

வடக்கில் அல்லது கிழக்கில் ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதுபற்றி மலலசேகரா கமிட்டி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது. இக்கமிட்டி முன்னர் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் வருகிற 19-ந் திகதி சாட்சியமளிப்பார்.

0 0 0

### சிங்களப் பரீட்சை

அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்கு தோற்று

இந்த சுப்பர் மார்க்கெட் புறக்கோட்டை வாழைத்தோட்டத்தில் (பிரைஸ் பார்க்) நிறுவப்பட இருக்கிறது.

0 0 0

### வீதியில் வெள்ளம்

கொழும்பு, இரத்தினபுரி, வெள்ளவாயா மட்டக்களப்பு வீதியில் கல்லாறு தாம்போதியில் ஆறு அங்குல வெள் நிற்பதால் வாகனங்கள் செல்லமுடியாதிருப்பதாக இலங்கை மோட்டார் சங்கம் தெரிவித்தது. மன்னம்பிட்டி தாம்போதியில் மூன்றடி வெள்ளம் நிற்கிறது.

0 0 0

### சபாநாயகர் வெள்ள நிவாரணம்

ஜனப்பிரதிகள் சபைச் சபாநாயகர் வெள்ள நிவாரண நிதி ஒன்றைத் தொடக்கியுள்ளார். இதை ஏற்றுக்கொண்டமற்ற எல்லாக்கட்சித் தலைவர்களும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

சபாநாயகர் உத்தேச வெள்ள நிவாரண நிதிக்கு எல்லா நன்கொடைகளையும் செலுத்துமாறு சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

0 0 0

### வேலைநிறுத்தம்

அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 1800 தொழிலாளர்கள் திடீர்வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். பொலநறுவை தேசீய வீடமைப்பு திட்டத்தொழிலாளரின் வேலைநிறுத்தத்தை ஆதரித்தேஇவர்கள் இத்திடீர் வேலைநிறுத்தில் ஈடுபட்டதாக அறியவருகிறது.

0 0 0

### இலக்கியப் பரிசு

இலக்கியத்தையும் கலையையும் வளர்ப்பதற்காகஆண்டுதோறும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பரிசில்களை வழங்குவதற்கான திட்டமொன்றை கல்வி, கலாச்சார அமைச்சு தயாரித்துள்ளது

எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிற்பிகள், இசைக்கலைஞர்கள், நாட்டியம் பயில்வோர் ஆகியோரை ஊக்குவிப்பதற்காக தயாரிக்கப்பட்ட இப்பரிசுத்திட்டத்தின் பிரதான அம்சமாக சிறந்த இலக்கியச் சிருஷ்டிக்கு பிரதமரின் பரிசாக 2500 ரூபா வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சிறிய நாடாக இருப்பினும் அதன் சக்தி வேறெந்தப் பெரிய நாட்டுக்கும் குறைந்ததல்ல. உலக நாடுகள் எல்லாவற்றுடனும் பகையில்லாமல் நட்புறவுடன் வாழும் நாடு இலங்கைதான். ஆசியாவின் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அமைதிக்கும் சரி உலக சமாதானத்துக்கும் கூட பயனுள்ள காரியம் செய்யக்கூடிய வாய்ப்பும் நமது நாட்டுக்கே பெருமளவு உண்டு.

இந்தியா துரிதமாக முன்னேறிவரும் நாடாக இருந்தாலும் - பெரிய நாடாக இருந்தாலும் ஆசியநாடுகளுக்கிடையில் ஒற்றுமையையோ ஒத்துழைப்பையோ ஏற்படுத்தக் கூடிய நிலையில் இன்று இல்லை. சமாதான சகவாழ்வுதான் இந்தியாவின் கொள்கையாகஇருந்தாலும் கூட அதைச்செயல்படுத்தக் கூடிய நிலையில் அது இப்போது இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி சீனா, பாகிஸ்தான் மலேசியத் தலைவர்களுடனும் இலங்கைத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, இப்பகுதியில் அந்நிய வல்லரசுகளின் தலையீடில்லாமல், ஆசிய மக்களே தங்கள் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கக்கூடிய ஒருவழியைக் காண முன் வந்து முயற்சிசெய்யவேண்டும் இதற்கு முதற்படியாக இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலும் நிலவும் பரஸ்பர அவநம்பிக்கையையும் அச்சத்தையும் அகற்றி சீரான உறவு நிலவ இலங்கை உதவுமானல் இலங்கையின் மதிப்பு மேலும் உயர்வதுடன் ஆசியாவின் அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் வழி வகுத்தபெருமையும் அதனையே சாரும்.

கதையைக்கேட்ட நாமும் சிரித்து ரசித்தோம். கூட்ட முடிவில் அடிகளாருக்குப் பால் கொடுத்தார் கூட்ட அமைப்பாளர். "இங்கு தீண்டாமை அனுஷ்டிக்கப் படுவதுண்டா?" என அடிகளார் கேட்டார். "இல்லை, நல்லூர் ஆலயம் திறந்து விடப்பட்டுள்ளது" என அங்கு குழுமியிருந்தவர்கள் மறுத்தவிபரத்தையும் பிரசு[illegible]திருக்கவில்லை. மேலும் தவத்திரு அடிகளாரை மட்டக்களப்பு, மலைநாடு, நோர்வூட் முதலிய இடங்களிலும் பத்திரிகை நிருபர்கள், நஞ்[illegible] விஷயமாக விசாரித்து அ[illegible]களின் சந்திப்பையும் மறுப்பையும் எழுதிக்கொண்டார்கள். ஆனல் குறித்த பத்திரிகைமட்டும் அதனை திரிகைகள் தாம் கூறி[illegible]ாக வெளியிட்டசெய்தி [illegible]ாய் என்றும் தமது 'தமிழகம்' பத்திரிகையில், "இலங்கையில் பாலில் யாரும் நஞ்சு கலகவில்லை; அது தவருனது" என வெளியிட்டிருப்பதாகவும் தொலைபேசி[illegible]லம் தெரிவித்தார்.

பின்பு தமிழ்நாட்டுப் பத்திரிகாலயங்களுடன் தொலை[illegible]ருனது. பத்திரிகா தர்மம் முறையாகப்பேணப்படாவிட்டால் எத்துணை விபரீதங்கள் நாட்டில் விளையும் என்பதை இச்சம்பவம்மூலமாகநாம்கண்டு கொண்டோம்உண்மையைக் காப்பாற்றுவதும், உண்மையைக்காப்பாற்றுவதற்காகப் போராடுவதுமே பத்திரிகா தர்மத்தின் ஆணிவேர்!

மளிப்பார்.

0 0 0

**சிங்களப் பரீட்சை**

அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் பெப்ரவரி3-ந் திகதிக்கு முன்னர் அவர்கள் கடமையாற்றும் இலாகாத் தலைவருக்கூடாக பரீட்சைப்பகுதிக்கு அனுப்பப்படல் வேண்டும். இப் பரீட்சை மார்ச்மாதம் 14, 21-ந் திகதிகளில் நடைபெறும்.

**சுப்பர் மார்க்கெட்**

கோட்டை, வெள்ளி

கொழும்பில் சுப்பர் மார்க்கெட் ஒன்றை நிறுவ கொழும்பு மேயர் திரு. வின்சென்ட் பெரேரா பத்து லட்சம் ரூபாவை ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் மூலம் பெற்றுள்ளார்

விப்பதற்காக தயாரிக்கப்பட்ட இப்பரிசுத்திட்டத்தின் பிரதான அம்சமாக சிறந்த இலக்கியச் சிருஷ்டிக்கு பிரதமரின் பரிசாக 2500 ரூபா வழங்கப்படும்.

0 0 0

**வானொலி லைசென்ஸ்**

இதுவரை வானொலி அனுமதிப்பத்திரங்களைப் பெருதோர் உடனடியாக அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் எச்சரித்துள்ளது.

வானொலி அனுமதிப்பத்திரம் இல்லாது வானொலி உபயோகிப்பவர்களை திடீர் பரிசோதனைக்குழு இப்போது நாட்டின் பல பாகங்களிலும் தீவிரமாகச் சென்று பரிசோதனை செய்கிறது. வானொலிப்பெட்டி பறிமுதலாவதுடன் பணத்தொகை அபராதமும்கட்ட வேண்டிய நிலை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

# பேராதனைப் பல்கலைக்கழக முருகன் உற்சவம்

## ஆதரவுநல்குமாறு பழையமாணவருக்கு அழைப்பு

பேராதனை, வெள்ளி

பேராதனைப் பல்கலைக்கழக முருகன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இம் மாதம் 13ம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்திருவிழா 22-ம் திகதி தைப்பூசத்தன்று முடிவடையும்.

இப் பல்கலைக்கழகத்தில் பயின்ற பழையமாணவர்களுக்கு இவ் வலங்கார உற்சவத்தின் 7ம் நாள் திருவிழாவை இந்து மாணவர் சங்கம் அளித்துள்ளது. இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டிருக்கும் பழைய மாணவர்களை அவர்களின் திருவிழாவுக்குஆதரவளிக்குமுகமாகத் தங்களில் எவருடனும் தொடர்பு கொள்ளுமாறு பேராதனைப் பல்கலைக்கழக கணிதத்துறை உதவி விரிவுரையாளர் திரு. மகேந்திரராஜா நொன்ருகலை அரசாங்க மிருக வைத்தியர் திரு அ சக்திவேல், யாழ்ப்பாணம் அத்தியடி 20 புதுத் தெருவைச் சேர்ந்த மு. விஜயராஜா, கொழும்பு 54/1, இராஜசிங்க வீதியைச் சேர்ந்த செல்வி புனிதம் கந்தையா ஆகியோர் கேட்டுள்ளனர்.

## உபசபாநாயகர் வாக்குறுதி

பருத்தித்துறை, வெள்ளி

"இன்று பொதுவாக நாட்டில்நிலவும் பொருளாதாரப் பிரச்னைகள் அனைத்தும் சிறுபான்மைத் தமிழ் மக்களைப் பாதிக்கும் அதேவேளையில் அவர்கள் மத்தியில் நிலவும் உடனடிப் பொருளாதார பிரச்னைகளையும் நான் அறிவேன். அநேகமான படித்த வாலிபர் வேலையற்றிருக்கின்றனர். அதேபோல நிலமற்ற பிரச்னையும் அவர்களைப்பெரிதும் பாதிக்கிறது. இவ்விரு பிரச்னைகளுக்கும் உடனடியான தீர்வுகாணமுடியாவிடினும் அப்பிரச்னைகளைத் தேசியரீதியாகத் தீர்வுகாண நான் முயற்சிப்பேன்"

இவ்வாறு உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம், நேற்றுமுன்தினம் சிறுபான்மைத் தமிழ்மக்கள் சார்பில் சில பொருளாதார உடனடிக் கோரிக்கைகளை முன்வைத்துப் பேட்டிகண்ட கரவை திருவள்ளுவர் சனசமூக நிலையப் பிரதிநிதிகளிடம் கூறினர். பேட்டிகண்ட குழுவில் திருவாளர்கள் க. கோபாலன், ஆ. வன்னியசிங்கம், சி. இராசேந்திரம், ஆ. ச. சகாதேவன், க. தியாகராசா ஆகியோர் இடம் பெற்றனர்.

# காந்திஜியின் போதனையை செயலாக்கும் குருகுலம்

'கல்வியென்று சொல்லும் போது குழந்தையினிடத்திலும் வயது வந்த மனிதனிடத்திலும் உடல் உள்ளம், உயிர் ஆகிய மூன்றிலும் உள்ள சிறந்த அம்சங்கள் யாவும் மலர்ந்து விளக்கம் பெறச் செய்வதையே நான் குறிப்பிடுகின்றேன். வெறும் எழுத்தறிவு என்பது கல்வியின் நோக்கமுமன்று. கல்விக்கு இது தொடக்கமுமன்று. ஆணுக்கும், பெண்ணுக்கும் கல்வி பயிற்றக் கூடிய பல முறைகளில் எழுத்தறிவும் ஒன்று, அவ்வளவேதான். எழுத்தறிவே கல்வியாகிவிடாது. ஆதலால் நான் ஒரு குழந்தைக்கு கல்வி பயிற்றுவதென்றால் முதலாவதாகப் பயனுள்ள ஒரு கைத் தொழிலை அதற்குக்கற்பித்து கல்விப்பயிற்சி தொடங்கிய நேரம்முதல் ஏதேனும் பொருள் உற்பத்தி செய்ய வல்லதாக அக் குழந்தையை ஆக்கவேதான் முயல்வேன்.

இத்தகைய கல்வி முறையில் உள்ளமும்உயிரும் மிகச் சிறந்த வளர்ச்சி பெறுதல் சாத்தியம் என்பது என்முடிவான கருத்து.'

'எது சித்தத்தை தூய்மைப்படுத்தவில்லையோ, மனத்தையும் புலன்களையும் அடக்கப் பயிற்சியளிக்கவில்லையோ வாழ்க்கைக்கு வேண்டுவன செய்துகொள்ளும் திறமையும் அஞ்சாமையும் எதிலிருந்து உண்டாகவில்லையோ ஜீவனத்துக் குரிய உபாயத்தை எது காட்டவில்லையோ அடிமைத் தளையைத் தகர்த்தெறிந்து சுதந்திரமாக வாழ்வதற்குத் தேவையான துணிவும் ஆற்றலும் உண்டாகவில்லையோ அந்தக் கல்வியில் எத்துணை அறிவுச் செல்வம் சேமித்துக் கிடந்தாலும் தர்க்கத் தேர்ச்சியும் பாஷைப்பயிற்சியும் பொதிந்திருந்தாலும் அது கல்வியாகாது. அரை குறையான கல்வியேயாகும்.'

மகாத்மாகாந்தியின் இந்த மகத்தான போதனையை அடிப்படையாகக் கொண்டு வடமாகாணத்தில் ஆதாரக் கல்விக்கு குருகுலம் ஒன்று இயங்கிவருவதுஇன்னும் பலருக்குத் தெரியாமலிருக்கிறதென்றே சொல்லவேண்டும் நாற்காலி உத்தியோகப் படிப்பையே கல்வி எனக் கருதும் நம்நாட்டு மக்களும் நம்நாட்டுக் கல்விஅமைச்சும் ஏன் அரசாங்கமும்கூட இந்தக் குருகுலம் பற்றி அறிந்திராமலும் அறிந்தும் அறியாததுபோல் அதில் அக்கறை செலுத்தாதிருப்பதும் விந்தையல்ல.

வடமாகாணத்திலுள்ள கிளிநொச்சிப் பகுதியில் ஏழாம் வாய்க்காலிலுள்ள இந்து ஆதாரக் கல்விக்கு குருகுலம்: கரடிப்போக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் செல்லும் வீதிவழியாக இரண்டரைமைல் தூரம் சென்றால் இடது கைப்பக்கத்தில் இக்குருகுலம் அமைந்திருப்பதைக் காணலாம்.

நல்லாசிரியர்கள் ஒருகுடும்பமாக வாழ்ந்து குருகுல முறையில் மாணவர்களை, வாழ்வாங்கு வாழப்பயிற்றுதல் இக்குருகுலத்தின்நோக்கம். மாணவர்கள் அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்த்து ஏமாற்றமடையாமல், "தம்மையே தமக்குதவி" என்ற துணிவுடன் வாழ உதவும் பலவகையான தொழிற் பயிற்சிகளைப் பயிற்றுதலும் இக் குருகுலத்தின் நோக்கமாகும்.

"உத்தமனுயிரு" "ஒன்றே குலம் - ஒருவனே தேவன்", "உற்றூர் உலகத்தவர்" உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ", இன்பமே சூழ்க-எல்லோரும் வாழ்க" என்ற கொள்கைகளைக் குருகுலம் சிறப்பாகக் கைக் கொளகிறது.

1) வேளாண்மை, (2) நூற்பு (3) நெசவு (4) தையல், (5) சமையல் (6) சவர்க்காரம் செய்தல் (7)தச்சுத்தொழில் (8)இரும்புத் தொழில் (9) கட்டடத் தொழில் (10) வனைதற் தொழில் (11) அச்சுயந்திரத் தொழில் 12) போறணைத் தொழில் (13 பண்ணைத் தொழில் (14) வியாபாரத் தொழில் பொறியியற்றொழில் ஆகிய படிப்படியாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இக்குருகுல ஆதாரக் கல்வி முறையில் இயங்கிவரும் கிளிநொச்சி ஏழாம்வாய்க்கால் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்விபயில்வர்,

சமய தோத்திர, சாத்திர நூல்களிலும்; தமிழிலக்கிய இலக்கண நூல்களிலும் விசேட பயிற்சியளிக்கப் படும்.

தோத்திரப்பாடல்களையும் நீதிப்பாடல்களையும் இளமையிலேயே மனனம் செய்யும் பயிற்சி சிறப்பாக அளிக்கப்படும்.

இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள், சுவாமிசுத்தானந்தர், சுவாமி சித்பவானந்தர், இராஜாஜி, திரு. வி. க., திரு. மு. வ. திரு. கி. வ., அப்துல்றகீம் ஆகியோர் நூல்களை மாணவர் சிறப்பாக வாசித்தறிவர்:

சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாதாரணமாக பேசவும் வாசிக்கவும் வடமொழிச் சுலோகங்களைப் பொருளுணர்ந்து முறையாக ஓதவும் மாணவருக்குப் பயிற்சி நாளாவட்டத்தில் அளிக்கப்படும்.

கலைப்பயிற்சி: பேச்சுக்கலை எழுத்துக்கலை, பாட்டுக்கலை. நடனக்கலை, நாடகக்கலை, சித்திரக்கலை, கோலக்கலை, அலங்காரக்கலை ஆகியவற்றில் விசேட பயிற்சியளிக்கப்படும்.

சமூகசேவைப் பயிற்சி: சாரணர் இயக்கம், சாந்திசேனை முதலுதவி, கிராமத்தொண்டு, ஆலயத்தொண்டு ஆகியவற்றில் விசேட பயிற்சியளிக்கப்படும்.

குருகுல வழிபாடு: சமய பேதங்கள் கடந்து ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாது எந்நாட்டவருக்கும் பொதுவாய் விளங்கும் இறைவனே குருவாகக் கொள்ளப்படுவர்.

எல்லாரும் தத்தம் சமய முறைப்படி வழிபாடுசெய்வதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

விழித்தெழும் பொழுதும், காலை மாலை ஆறு மணிக்கும் உண்ணும்பொழுதும் உறங்கும்பொழுதும் விசேட வழிபாடுகள் இடம்பெறும்.

சூழழிலுள்ள சமய சமூக சேவாநிலையங்களில் நடைபெறும் விசேட நிகழ்ச்சிகள் வழிபாடுகள் யாவற்றிலும் குருகுல மாணவர்கள் கலந்துகொள்வர்,

பெரியபுராண பெரியார்கள தினங்களும், சகல சமயப் பெரியார்கள். ராமகிருஷ்ணர், விவேகானந்தர், திருவள்ளுவர், பாரதியார், நாவலர், காந்தியடிகள ஆகியோருடைய தினங்களும் நினைவு கூறப்படும்.

குருகுல உணவு எல்லாருக்கும் மூன்று வேளையும் சிறந்த-சிக்கனமான-சத்துள்ள-தாவர உணவே அளிக்கப்படும்

மிகச்சிறந்த நோக்கத்தையும் இலட்சியத்தையும் கொண்ட இக்குருகுலம் செழித்துவளர்ந்துநாட்டுக்கு நன்மை செய்வதற்கு தனிப்பட்டவரோ, வேறு எந்த ஸ்தாபனமோ அதற்கு ஊக்கமும் உதவியுமளிக்க முன் வராதது துரதிர்ஷ்டமென்றேசொல்லவேண்டும் எது எதெற்கெல்லாமோ அள்ளிக் கொடுப்பவர்கள் கூட இக்குருகுலத்துக்குக் கிள்ளிக்கொடுக்கக்கூட முன்வரவில்லை என்று இக்குருகுலத்தைத் தெரிந்த ஓர் அன்பர் கவலையுடன் கூறுகிறார். இப்போது இக்குருகுலத்தில் ஐம்பது மாணவர்கள் பயில்கிறார்கள். இன்னும் பல மாணவர்கள் சேரலாம். நல்ல சமுதாயத்தை, நல்ல மக்களை உருவாக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக் குருகுலத்தை அதன் நிர்வாகியான திரு. கதிரவேலு பல சிரமங்களுக்கிடையில் தன்னையே தியாகம்செய்து இயக்கிவருகிறார். காட்டில் எறித்த நிலாவாகப்போகாமல் இக் குருகுலம் சிறந்து விளங்கி சிறந்த மக்களை உருவாக்க நல்ல மனம் படைத்தவர்கள் உதவ வேண்டும்.

எம். ஜி.

# மரணமான சார்ஜன்ட் தந்திகளுடன் வந்தார்

யாழ்ப்பாணம், சனி

ஒரு வாரத்துக்கு முன்னர் ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் திடீரென மரணமானதாகக் கிடைத்த மற்றொரு செய்தி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தையே அதிர்ச்சியடையச் செய்தது.

அடுத்தநிமிடமேபொலிஸ் சார்ஜன்டின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்து அவரது பருத்தித்துறை இல்லத்துக்கு அனுதாபத் தந்திகள் ஒன்றின் பின் ஒன்ருக அனுப்பப்பட்டனவாம்.

திருகோணமலையிலிருந்தும்கூட பல நண்பர்கள் அனுதாபத் தந்திகளை அவருக்கு அடித்தார்களாம். தந்திகளை வாசித்த குறிப்பிட்ட சார்ஜன்டே அவற்றைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்.

விபரம் புரியாது தவித்த சார்ஜன்ட் தந்திகளுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு வந்துவிட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ நிலைய போக்குவரத்துப் பகுதியில் கடமையாற்றிய அந்த சார்ஜன்ட் தனக்குக் கிடைத்த தந்திகளுடனேயே அங்கு வந்து தந்திகளை அனுப்பிவைத்த பொலிசாரை அதிக வியப்பிலாழ்த்தியது.

இதுபற்றிப் பூரண விசாரணை நடாத்தப்பட்டது. சார்ஜன்ட் ஓய்வுபெற்றுவிட்டார் என்பதை ஆங்கிலம் சரியாகத் தெரியாத ஒருவர் 'றிடையர்ட்' என்பதற்குப்பதிலாக 'எக்ஸ்பயர்ட்' என்று சொன்னதுதான்இத்தனைக்கும் காரணம் என்று பின்னரே தெரியதந்ததாம்.

(கா. நி)

## சீட்டு ஆடினார்களாம்

கோப்பாய், வெள்ளி

சட்ட விரோதமாக சீட்டாடிக் கொண்டிருந்தவர்களை பொலிஸ் கைதுசெய்தனர். கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பூதர் மடத்தடியில் இச்சம்பவம் நடைபெற்றது.

கோப்பாய்பொலிஸ்நிலைய சார்ஜன்ட் திரு. இராஜமுத்தையா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரே கைதுசெய்தனர். சிலர் தப்பியோடி விட்டதாகக் கூறப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 17-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org